மாலை 47 மணி 9 செப்டம்பர் 2005 விலை ரூ10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

அழகர்கோயில் - 625 301

மேலூர் வட்டம்,

மதுரை மாவட்டம்

அன்னதானத்திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அன்னதான திட்டம் இத்திருக்கோயிலில் சிறப்பாக 23.3.2002 முதல் நடைபெற்று வருகிறது. அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றது.

நன்கொடை விபரம் :

1. நாள் 1-க்கு 100 - நபர்களுக்கு 1 வேளை அன்னதானம் வழங்க ரூ.1,200.00.
2. நாள் 1-க்கு 50 நபர்களுக்கு 1 வேளை அன்னதானம் வழங்க ரூ. 600.00 (இத்திருக்கோயிலின் உபகோயிலான மதுரை நகர் தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில்)
3. நிரந்தர வைப்பு நிதி திட்டம் ரூ. 15,000.00 (வருடத்தில் ஒரு நாள் உபயதாரர் விரும்பும் நாளில் 100-நபர்களுக்கு அன்னதானம் வழங்க)
4. மேலும் மொத்தமாக வைப்பு நிதி (Corpus fund) ஏற்படுத்த நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றது. இதற்கு வருமான வரிச்சட்டம் 80ஜி-ன்படி 50% வரிவிலக்கு உண்டு.
5. நன்கொடையாக அரிசி, காய்கறி மற்றும் இதரப் பொருட்களும் வழங்கலாம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி

துணைஆணையர் - நிர்வாக அதிகாரி,
அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் - 625 301
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

டாக்டர் சௌமினிரமேஷ், எம்.டி.,
தலைவர், அறங்காவலர் குழு

திருமதி பா.பாரதி, பி.எல்.,
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்

என். முத்துராமலிங்கத்தேவர்,
ஆ. வீரணன்,

ஆர். ராஜேஸ்வரி,
எம். கண்ணன்

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப புரட்டாசி
மாலை 47 மணி 9 செப்டம்பர் 2005

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

**''கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி''**

என்பது திருக்குறள்.

கொடை, அருள், செங்கோல் முறைமை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட நாடாள்வோர், நாட்டிற்கு ஒளியாகத் திகழும் மாட்சிமிக்கவர் என்பதை இத்திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது.

இத்திருக்குறளுக்கு இலக்கணமாக விளங்கும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களின் அன்னதானத்திட்டத்திற்குத் திங்கள் தோறும் தம் மாத ஊதியத்தைக் கொடையாகக் கருணை உள்ளத்துடன் வழங்கிவருவதும், அண்மையில் 30 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கென ரூபாய் மூன்று லட்சத்தி ஏழாயிரத்தி அறுநூற்றி ஒன்று வழங்கி இருப்பதும் மக்கள் நெஞ்சங்களை நெகிழச்செய்யும் ஒரு உன்னத அறப்பணி என்பதில் ஐயமில்லை.

ஓம் என்ற பிரணவத்தில் இருந்து உலகம் தோன்றியது என்பர் அருளாளர்கள். உலகத் தோற்றத்துக்கும் ஒடுக்கத்திற்கும் பிரணவ மந்திரமே காரணம் என்பர்.

அந்தப் பிரணவ சொரூபமாகத் திகழ்பவர் விநாயகர். விநாயகரின் உருவமும் பெரிது, அவருடைய மகிமையும் பெரிது என்பதை

**''உருவம் பெரிததனில் உள்ளம் பெரிது
ஒருநல்வரமும் பெரிதே பருவமதில்
பெய்யும் மழைபோல் பெய்கருணை தான்பெரிதால்
ஐய, பெரிதுன் அருள்''**

என்ற பாடல் தெளிவுபடுத்துகின்றது.

மேலான முழுமுதற்பொருள் விநாயகர் அவதரித்த விநாயக சதுர்த்தியைக் கொண்டாடும் வகையில் மூலதாரமூர்த்தி அவர்தம் கீர்த்தியை விவரிக்கும் கட்டுரைகள் பலவும் இத்திங்கள் ''திருக்கோயில்'' இதழை அலங்கரிக்கின்றன.

குரு பெயர்ச்சியைச் சிறப்பிக்கும் **''குருபகவான் தவம் இருந்த குருவித்துறை'' ''குரு கற்றுத்தரும் பாடம்''** ஆகிய சிறப்புக் கட்டுரைகளும் இத்திருக்கோயில் இதழை அலங்கரிக்கின்றன.

''காலச்சுவடுகள்'' பகுதியில் **''கவர்னர் கோலெட்துரை கட்டிய வரதாராஜர் திருக்கோயில்''** கட்டுரையும். கோனேரி ராஜபுரம் நடராஜரைப் பற்றிய அரிய கட்டுரையும் வாசகர்களைப் பெரிதும் கவரும் என நம்புகின்றேன்.

சுந்தர மூர்த்தி நாயனார் வெள்ளை யானை மீதேறியும், சேரமான் பெருமாள் நாயனார் வெள்ளைக் குதிரை மீதேறியும். கயிலாயம் விரைந்து புறப்பட, **''விநாயகர் அகவல்''** பாடிய ஔவையாரைத் தம் துதிக்கையில் ஏற்றி அவர்களுக்கு முன்னமே திருக்கயிலாயம் சேர்த்தார் விநாயகப் பெருமான் என்பது வரலாறு.

**''தத்துவ நிலையைத் தந்தெனை ஆளும்
வித்தக விநாயக விரைகழல் சரணே''**

என நாமும் விநாயகர் திருவடி துதிப்போம். திருவருள் பெறுவோம்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத்திட்டத்துக்கு

3 லட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாய் நன்கொடை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2002-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தைத் தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட திருக்கோவில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தமக்குக் கிடைக்கப் பெற்ற சம்பள உயர்வு நிலுவைத் தொகையான 2 இலட்சத்து 54 ஆயிரத்து 741 ரூபாயுடன். 2005-ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய 4 மாதங்களுக்குரிய சம்பளத் தொகையையும் சேர்த்து மொத்தம் 3 லட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாயை 29 திருக்கோயில்களுக்குத் தலா 10ஆயிரம் ரூபாய் வீதமும், தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர், சூரியனார்கோவில், சூரிய நாராயணப் பெருமாள் திருக்கோவிலுக்கு 17,601 ரூபாயையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்னதானத் திட்டத்திற்காக, நன்கொடை வழங்கிய திருக்கோவில்கள் விவரங்கள் வருமாறு:-

இதழின் உள்ளே ....

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்: ''திருக்கோயில் அன்னதானத் திட்டத்''திற்கு 3 லட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாய் நன்கொடை 2
2. சங்கடஹர சதுர்த்தியும், அங்காரக சதுர்த்தியும் 4
3. திருச்சி உச்சிப் பிள்ளையார் பெருமை - திருமதி எஸ். கல்யாணி எம்.எல் 5
4. காவிரி தந்த கருணையங்கடவுள் 8
5. காவிரி காத்த கருணைமா முனிவர் 9
6. விநாயகருக்கு உகந்த நிவேதனப் பொருட்கள் - மு,அருணகிரி 10
7. விநாயகர் அருள் மழை - மும்பை இராமகிருஷ்ணன் 11
8. திருமால் உகந்த மண்மலர் - அ.நிறைமதி 12
9. பெற்றோருக்குச் செய்யும் சேவையே பெரிய சேவை (நீதிக் கதை) - அருள்செல்வி 13
10. குரு கற்றுத் தரும் பாடம் - ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் 14
11. குருபகவான் தவம் இருந்த குருவித்துறை - கலைவாணன் 18
12. கேள்வி பதில் 20
13. தெரிந்த கோயில், தெரியாத செய்தி : கோனேரி இராஜபுரம் நடராஜர் - மா.இலட்சுமணன் 21
14. திருவானைக்காவல் அருள்மிகு வீரபத்திர சுவாமி ஆலயம் - வாசுகி கண்ணப்பன் 23
15. திருவிளையாடல் புராணம் - இரா.அரங்கசாமி 24
16. காலச்சுவடுகள் - கவர்னர் கோலெட்துரை கட்டிய வரதராஜர் திருக்கோயில் 26
17. மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம் 27
18. திருமந்திர உபதேசம் - ''திருமந்திரச்செல்வர்'' டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) 30
19 ''யார் பெறுவார் அச்சாவே'' - முனைவர் பு.ஏ.இராமையா இ.ஆ.ப 32
20. தமிழ்நாட்டுச்சித்தர் பரம்பரை இடைக்காட்டுச்சித்தர் - முனைவர் இரா.செல்வக்கணபதி 34
21. இவ்வளவு தூரம் வந்த பிறகு - ப. ராஜா பிஎஸ்.சி.பி.எல். 37



1. அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவில், வடபழனி. சென்னை,
2. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவில், திருவேற்காடு.
3. அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம்.
4. அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், ரத்தினகிரி, வேலூர் மாவட்டம்.
5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் புதூர், செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.
6. அருள்மிகு தாயுமானவர் சுவாமி திருக்கோவில், மலைக் கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
7. அருள்மிகு கல்யாண வெங்கடரமணசுவாமி திருக்கோவில், தான்தோன்றி மலை, கரூர் மாவட்டம்.
8. அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோவில், சிறுவாச்சூர், பெரம்பலூர் மாவட்டம்.
9. அருள்மிகு வீரகாளியம்மன் திருக்கோயில், பெரம்பூர், புதுக்கோட்டை மாவட்டம்.
10. அருள்மிகு தேனு புரீஸ்வரர் திருக்கோவில், பட்டீஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்.
11. அருள்மிகு சூரிய நாராயண பெருமாள் திருக்கோவில், சூரியனார் கோவில், திருவிடை மருதூர்.
12. அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோவில், ஆலங்குடி, வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
13. அருள்மிகு நீலாயதாட்சியம்மன் உடனுறை காயாரோகண சுவாமி திருக்கோவில், நாகப்பட்டினம்.
14. அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில், திருக்கடையூர், நாகப்பட்டினம் மாவட்டம்.
15. அருள்மிகு சந்திர மவுலீஸ்வரர் திருக்கோவில், திருவக்கரை, விழுப்புரம் மாவட்டம்.
16. அருள்மிகு கூடலழகர் திருக்கோவில், மதுரை
17. அருள்மிகு தர்மசாஸ்தா திருக்கோவில், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.
18. அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோவில், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.
19. அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவில், பிள்ளையார்ப்பட்டி, சிவகங்கை மாவட்டம்.
20. அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில், ராமேஸ்வரம், ராமநாதபுரம் மாவட்டம்.
21. அருள்மிகு வன்னி விநாயகர் திருக்கோவில், மடம் சின்ன ஓடைப்பட்டி, விருதுநகர் மாவட்டம்.
22. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், மடவார்வளாகம், விருதுநகர் மாவட்டம்.
23. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில், திருநெல்வேலி.
24. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்.
25. அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில், மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்.
26. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம்.
27. அருள்மிகு வன்னி விநாயகர் திருக்கோவில், குன்னூர், நீலகிரி மாவட்டம்.
28. அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோவில், ஒருக்காமலை, சங்ககிரி நகர், சேலம் மாவட்டம்.
29. அருள்மிகு லஷ்மி நரசிம்மசுவாமி திருக்கோவில், நாமக்கல்
30. அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோவில், தருமபுரி.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமது சம்பளத்திலிருந்து திருக்கோவில்களின் அன்னதானத் திட்டத்திற்கு வழங்கிய இந்த நன்கொடைக்கான காசோலைகளை மேற்கண்ட கோவில்களின் சார்பில் அத்திருக்கோவில்களின் செயல் அலுவலர்கள் நேரில் வந்து பெற்றுக் கொண்டனர்.

சங்கடஹர சதுர்த்தியும் அங்காரக சதுர்த்தியும்

ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி விநாயகர் அவதரித்த நாளாகும். ஆகவே அன்று விநாயகர் சதுர்த்தி எனச் சிறப்பிக்கப்பட்டு முழு முதற் கடவுளான விநாயகரை தேவரும், முனிவரும், யாவரும் கொண்டாடி வழிபட்டு வருகின்றோம்.

ஆவணி மாதம் தேய்பிறை சதுர்த்தித் திதிக்குத் தனக்கும் அத்தகைய பெருமை பெற ஆசைஉண்டானது. ''வளர்பிறை சதுர்த்தி திதி பெற்ற பெருமை, தேய்பிறை சதுர்த்தி ஆகிய எனக்கு இல்லையே ! என்று என் மனம் மிகுந்த சங்கடம் கொள்கிறது. என் சங்கடம் தீர தாங்கள் அருள் புரிய வேண்டும்'' என்று பணிந்தாள் தேய்பிறை சதுர்த்தி.

அந்தச் சதுர்த்தித் திதிதேவிக்கும் அருள் புரிந்து அதனைச் சங்கடஹர சதுர்த்தியாக தேவரும், முனிவரும், யாவரும் கொண்டாட அருள் புரிந்தார் விநாயகப்பெருமான்.

ஆவணி மாதம் தேய்பிறை சதுர்த்தித் திதியில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தியில் சந்திரோதய காலத்தில் சங்கடஹர சதுர்த்தி விரதம் இருந்து விநாயகப் பெருமானை வழிபட்டால் சங்கடங்களும், சஞ்சலங்களும் நீங்கிச் சர்வ மங்களங்களும் கைகூடுதல் திண்ணமாகும்.

முற்கல முனிவர், விப்ரதன் என்ற தீய வேடன் திருந்தும் வகையில் அவனுக்கு இந்தச் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை உபதேசித்தார்.

அவ்வேடனும் சங்கடஹரசதுர்த்தி விரதம் இருந்து வழிபட்டு, தன் புருவத்தின் நடுவில் ஒரு சிறிய தும்பிக்கை பெற்று விநாயக வடிவம் பெற்றான். அதுமுதல் அவன் புருசண்டி முனிவராக ஆனான்.

புருசண்டி முனிவராகிய வேடனின் முன்னோர்கள் யாவரும் நரகத்தில் கிடந்து கொடுந்துயர் அனுபவித்து வந்தார்கள். இதனை நாரதர் கூற அறிந்த புருசண்டி முனிவர் மீண்டும் சங்கடஹரசதுர்த்தி விரதம் இருந்தார். இதனால் அவருடைய முன்னோர்கள் எல்லாம் நரகத்தில் இருந்து விடுதலை பெற்றுச் சொர்க்கம் அடைந்தனர்.

ஆகவே சங்கடஹர சதுர்த்தி விரதம் இருந்து விநாயகரை வழிபட்டால் நரகத் துன்பத்திலிருந்து நம் முன்னோரையும் கூட விடுவிக்கலாம். நாமும் நரகத்தில் கிடந்து உழலாமல் சொர்க்கம் அடையலாம்.

அங்காரகன், சங்கரஹரசதுர்த்தி அன்று விரதம் இருந்து வழிபட்டதால் நவகிரகங்களுள் ஒருவனாக உயர அருள்புரிந்தார் விநாயகர்.

''சுவாமி ! சங்கடஹர சதுர்த்தி செவ்வாய்க் கிழமைகளில் வரும் போது அந்நாள் அங்காரக சதுர்த்தி என என் பெயரால் வழங்கப்பட வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான் அங்காரகன்.

''அவ்வாறே ஆகட்டும்'' என அருள் புரிந்தார் விநாயகப் பெருமான். செவ்வாய்க் கிழமைஅன்று வரும் அங்காரக சதுர்த்தியில் விரதம் இருந்து வழிபட்டால் கடன் தொல்லைகள் யாவும் நிவர்த்தி ஆகி, நோய் நொடிகளும் நீங்கிச் செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் பெறலாம்.

''விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து''

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்

இவர் தமிழகத்தின் மிகப் பழைய முதல் விநாயகர் ஆவார். காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு.

''திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்
செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் -
உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை''

- விநாயகர் திருஇரட்டைமணி மாலை

''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கேற்ப விநாயகர் கோயில் இல்லாத இடமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு இன்று விநாயகர் பெருமை உலகமெங்கும் பரவியுள்ளது.

அரசமரத்தடிகளிலும், ஆறு குளங்களிலும் அமர்ந்திருந்து அருள் பாலிக்கும் விநாயகப் பெருமான், சிரசில் கொட்டிக் கொண்டால் செல்வ வளம் தருவார். சிதறுகாய் உடைத்தால் துயரங்களைச் சிதறி ஓடவைப்பார். அருகல்புல் மாலையிட்டால் பெருகும் பொன்னை அள்ளித்தருவார். எந்தச் செயலையும் தொடங்கும் முன் பிள்ளையார் சுழி போட்டு துவங்குவதில் இருந்தே விநாயகர் வழிபாட்டின் மகிமையை உணர்ந்து கொள்ளலாம்.



திருச்சி உச்சிப் பிள்ளையார் பெருமை

திருமதி சி. கல்யாணி, எம்.எல்.,

கணபதி, விநாயகர், பிள்ளையார் என்ற பல பெயர்களைக் கொண்டு ஞானமே வடிவாக விநாயகப் பெருமான் விளங்குகின்றார். பிள்ளையார் வழிபாடு வேதகாலம் தொட்டு நமது நாட்டில் பரவி வந்துள்ளது. சைவரேயன்றி வைணவரும், சமணரும், பௌத்தரும் இவரை வணங்குகின்றனர். ஆண்டுக்கொருமுறை நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அகார உகாரங்களாகிய சிவமும் சக்தியும் கூடிய சுத்த மாயாக்காரியமாகிய நாதபிரணவமாயிற்று என்பதை விளக்க எழுந்த திருமேனி விநாயகர் திருமேனி ஆகும். கணங்களுக்கெல்லாம் பதியாய் விளங்குதலின் கணபதி என்று போற்றப் படுகின்றார். கணபதி என்பதற்கு ஞானநெறியில் நின்று எய்தப்பெறும் பரம்பொருள் என்று பொருள் கூறுவர். விநாயகர் என்பதற்கு தனக்கு மேல் நாயகர் இல்லாதவர் எனப்பொருள்கூறுவர்.

விநாயகரை வணங்கித் தொடங்கும் எக்காரியமும் விக்கினம் இன்றிச் சிறப்பாய் முடியும். அவரை வணங்காமல் தொடங்கும் செயல் முற்றுப் பெறாது. முப்புரம் எரிக்கச் சென்ற சிவபெருமானின் தேரின் அச்சைமுறித்த வரலாறு விநாயகரின் ஆற்றலையும், சிறப்பையும் உணர்த்தும். இந்நிகழ்ச்சியை 'அச்சது பொடிசெய்த அதிதீரா' என்று திருப்புகழ் பாடல் குறிக்கிறது. ஆதலால் எந்தவொரு செயல் செய்தாலும் விநாயகர் துதி சொல்ல வேண்டும்.

எனவே தத்துவப் பொருளாய் காரிய சித்தியருளு பவராய் விளங்கும் விநாயகரை வழிபட அனைத்து துன்பங்களும் நீங்கி வாழ்வில் மேன்மை உண்டாகும்.

விநாயகர், பார்வதி பரமசிவனுக்கு மானசீகப் புத்திரர், ஓங்காரவுருவினர், யானைமுகம், **தேவஉடல், பூதஅடிகள் உடையவர், ஒற்றைக்**

திருச்செங்காட்டங்குடி - வாதாபி கணபதி :



நரசிம்மவர்ம பல்லவனின் படைத் தளபதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்ட நாயனார்) சாளுக்கியரை வாதாபியில் வென்று, அங்கிருந்து இவரைக் கொண்டு வந்து இங்குப் பிரதிட்டை செய்தார் என்று பலரும் கூறுகின்றனர். இவரே ''வாதாபி கணபதி''.

கொம்பர், இருசெவியினர், முக்கண்ணர், துதிக்கையுடன் ஐந்து கரத்தர், அங்குசபாசத்தர், ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர். பிறைசூடியவர், பெருச்சாளி வாகனர்.

யானை முகம் விநாயகப் பெருமான் பிரணவ வடிவினர் என்பதை உணர்த்தும். விநாயகப் பெருமானது மூன்று கண்கள் ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று ஒளிப்பொருள்களைக் குறிக்கும். ஐந்து கரத்தர் என்பது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை குறிக்கும். அவர்தம் கரங்களுள் ஒன்றில் அங்குசமும் மற்றொன்றில் மோதகமும், பாசமும் மற்றொரு கரத்தில் தந்தமும் மற்றொரு கரத்தில் தாய்தந்தையரை வழிபடும் பொருட்டு நீர்க் கலசமும் தாங்கியிருக்கிறார்.

உயிர்களாகிய நம்மை ஆணவமலம் ஆகிய யானையானது பற்றி நலிவுறுத்தாதிருக்குமாறு பாசமும் அங்குசமும் திருக்கரத்தில் ஏந்தியுள்ளார். விநாயகரே ஒரு யானையாக இருந்தும் யானைகளை அடக்கும் கருவிகள் ஆகிய அங்குசபாசங்களை ஏந்தியிருப்பது அவர் தமக்கொரு தலைவரை இன்றித் தாமே யாவருக்கும் தலைவராக விளங்கும் தனி முதன்மைத் தன்மையினை உணர்த்துவதாகும்.

விநாயரின் திருவுருவம் உயர்திணையாகவும், அஃறிணையாகவும் விளங்குகிறது. தலை யானைத் தலையாகவும், உடல் தேவ உடலாகவும் கால் குறட் பூதமாகவும் அமைந்து விநாயகர் எல்லாமாய் விளங்குதலை அறிவுறுத்துகின்றது. மிகப்பெரிய யானைவடிவம் உடைய விநாயகர் மிகச் சிறிய பெருச்சாளியை வாகனமாக கொண்டிருப்பது அவரே எல்லாப் பொருட்களுக்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும், தாங்கும் நிலையிலும், தாங்கப் பெறும் நிலையிலும் விளங்கி வருகிறார் என்னும் உண்மையை புலப்படுத்தும்.

அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் காவிரி நதியின் தென்கரையில் அமைந்துள்ள சிவத் தலமாகும். பாடல் பெற்ற 274- சிவாலயங்களுள் இந்த ஆலயத்தை திருஞானசம்பந்தரும், அப்பரும் பாடியுள்ளனர்.

இத்திருத்தலத்தில் விநாயகப்பெருமான் மலையின் மேல் உச்சி விநாயகராகவும், மலையின் அடிவாரத்தில மாணிக்க விநாயகராகவும் அமர்ந்து அருள்பாலித்து வருகிறார். விநாயகர் ஆலயங்களுள் தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது உச்சி விநாயகர் ஆலயமாகும்.

இராமர் பட்டாபிசேகத்திற்குச் சென்ற விபீஷணர், இராமனிடம் விடைபெறும்போது இராமர் தனது ஞாபகார்த்தமாக அரங்கநாதரை விமானத்துடன் பரிசாக அளித்தார். இராமர் விமானத்தைப் பூமியில் வைக்குமிடத்தில் விமானம் நிலையாக தங்கிவிடும் என்பதை விபீஷணரிடம் தெரிவித்தார். விபீஷணர் அதை இலங்கையில் வைக்க விரும்பி கொண்டு சென்றார். அந்தணர் உருவம் கொண்டு காவிரிக் கரையில் நின்ற சிறுவனிடம் கொடுத்துவிட்டு, காவிரிக் கரையில் நீராடச் சென்றார். அந்தணச் சிறுவன் தான் அழைத்த வுடன் வரவேண்டுமென்றும் 3-முறை அழைத்தும் வராவிட்டால் பூமியில் வைத்து விடுவதாகவும் கூறினான். விபீஷணரும் சம்மதித்து நீராடச் சென்றார். சிறுவன் விபீஷணரை 3 முறை அழைத்து விட்டு விபீஷணன் வரும் முன்னரே பூமியில் வைத்துவிட்டு மலையின் உச்சியில் ஏறி ஓடினான். திரும்ப வந்து பார்த்த விபீஷணர் அரங்கர் விமானத்தை எடுத்து பார்க்க அதை எடுக்க இயலாமல் நிலைபெற்று விட்டது. கோபம் கொண்ட விபீஷணர் அந்தணச் சிறுவனைத் துரத்திச் சென்று தலையில் குட்டினார். அந்தணச் சிறுவன் உச்சி விநாயகராகக் காட்சி தந்தார். அரங்கநாதர் திருச்சிராப்பள்ளியிலேயே இருக்க வேண்டும் என்பது விநாயகப் பெருமான் திருவுளம் என அறிந்தார். இப்புராணம் விநாயகர் புராணத்தில் இடம் பெற்றுள்ளது. தற்போதும் உச்சிவிநாயகர் தலையில் $2^1/_2$ அங்குல அளவிலான குட்டுப்பட்ட பள்ளம் உள்ளது. மலையின் கீழ்ப்புறம் தற்போதும் விபீஷணர் பாதம் இரண்டு பாறையின் மீது உள்ளது.

உச்சிவிநாயகர் சன்னதியிலிருந்து பார்த்தால் மலையும், படிக்கட்டுகளும் விநாயகரின் துதிக்கைப் போல இயற்கையிலேயே அமைந்துள்ளதைக் காணலாம்.

ஒப்பற்ற ஓங்கார பிரணவ சொரூபியாகிய விநாயகருக்கு ஆவணி மாதம் அமாவாசைகழித்து நான்காம் நாள் வருவது மகா விநாயகர் சதுர்த்தி ஆகும். விநாயகப் பெருமானுக்கு உகந்தநாள்தான் விநாயகர் சதுர்த்தி. சஷ்டியைக் கொண்டாடினால் சண்முகனின் அருள்பெறலாம். சதுர்த்தியைக் கொண்டாடினால் விநாயகர் அருளால்

நூற்றெட்டு விநாயகர் திருமேனிகள்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நூற்றெட்டு விநாயகர் திருமேனிகள் உள்ளன.

வெற்றிகளைக் குவிக்கலாம் என்பது வேதவாக்கு.

முற்காலத்தில் கஜமுகாசுரன் என்ற பெயரினைக் கொண்ட அசுரன் ஒருவன் கடுந்தவமியற்றிச் சிவபெருமானிடம் தன்னை மனிதர், விலங்கு, தேவர், ஆண், பெண், ஆயுதங்களால் கொல்ல முடியாத வரத்தைப் பெற்றான். வரத்தைப் பெற்றதும் அமரர் அனைவரையும் துன்புறுத்தலானான். சிவபெருமான் ஆவணி மாத அமாவாசைகழிந்த நான்காம் நாள் சதுர்த்தியன்று யானை முகத்தோடும்

மனித உடலோடும் விநாயகரைத் தோற்றுவித்தார். விநாயகர் தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து மூஷிக வடிவந்தாங்கித் தன்னை எதிர்த்துப் போரிட்ட கஜமுகாசுரனை வென்று மூஷிகத்தின் மீதேறி அமர்ந்து அதனைத் தன் வாகன மாகவும் ஆக்கி அருள் புரிந்தார்.

இவ்வாறாக விநாயகப்பெருமான் கஜமுகாசுரனைக் கொல்லும் பொருட்டு திருஅவதாரம் செய்த தினமான ஆவணிமாத சதுர்த்தி தினமே விநாயகர் சதுர்த்தி நாளாகும். இந்நாளில் உலக காரணராகிய சிவபிரானைப் பூஜிக்க மகிமையும் கீர்த்தியும் வாய்ந்த நாளாகும்.

விநாயகருக்கு உகந்த நைவேத்தியம் கொழுக்கட்டை, மோதகம், அப்பம், அதிரசம், முப்பழம், எள் உருண்டை, தேன், கரும்பு, தேங்காய், பொரி, அவல் போன்றவையாகும்.

அகம் என்றால் மனம் என்று பொருள். அகங்கள் மோதாமல் இருக்க மோதகத்தைப் படைக்கலாம். சொல்லாற்றல் பிறக்க எள்ளுருண்டை வைக்கலாம். தேனான வாழ்வு பெறத் தேனும், தினைமாவும் வைத்து வழிபடலாம். ஒப்பற்ற வாழ்வு அமைய அப்பம், முப்பழம், அதிரசம் வழங்கலாம். சகோதர ஒற்றுமைக்கு மாம்பழம் வைத்து வழிபடலாம்.

இவற்றுள் ஏதேனும் ஒருபொருளை நைவேத்தியமாக வைத்து வழிபட்டால் நினைத்த காரியம் நினைத்தபடியே கைகூடும்.

இவ்வாலயத்தில் மகாவிநாயகர் சதுர்த்தியன்று 18 படி (முக்குறுணி) அரிசியினால் ஆன இரண்டு பெரிய கொழுக்கட்டைகள் செய்யப்பட்டு அருள்மிகு மாணிக்க விநாயகருக்கும், உச்சி விநாயகருக்கும் நிவேதனம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

ஆதியந்த பிரபு

ஆதி - முதல் வழிபாட்டிற்கு உரியவர் விநாயகர். அந்தம் - நிறைவு வழிபாட்டிற்கு உரியவர் அனுமன். ''பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது'' என்ற பழமொழியும் இதே கருத்தை உணர்த்துகிறது. ''அர்த்தநாரி'' என்ற இரட்டைத் தெய்வத் திருமேனிகளைப் போல், விநாயகர் வலப்பக்கமும். அனுமன் இடப்பக்கமும் இணைந்து அமைந்த திருமேனியே ''ஆதியந்தப் பிரபு''. இவரைச் சென்னை மத்திய கைலாஸ் ஆலயத்திலும், சேலம் கந்தகிரியிலும் தரிசிக்கலாம்.

''கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலைத் தீருமே''

கணபதியை நாளும் கைதொழுது வழிபட்டு உய்வடைவோமாக.

திருக்கோயில்
திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ 10/
ஓராண்டுச்சந்தா	ரூ 120/
பத்து ஆண்டுச்சந்தா	ரூ 1000/
ஆயுட்காலச்சந்தா	ரூ 1500/

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ 15,000/
2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 10.000/
3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 7,500/
4. உள்புறம் முழுப்பக்கம்	ரூ 5,000/
5. உள்புறம் அரைப்பக்கம்	ரூ 3,000/

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

காவிரி தந்த கருணையங்கடவுள்

காவிரி தந்த கருணையங்கடவுள் நம் கணபதியே ஆவார். இதனைச் சிவப்பிரகாசசுவாமிகள் ''பிரபுலிங்க லீலை'' எனும் நூலில்

''சுராகுலதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி ஆக்குவாம்''

என்று பாடிப் போற்றியிருத்தல் காணலாம்.

இமாலயத்தில் பங்குனி உத்திர நன்னாளில் பார்வதி-பரமசிவம் திருக்கல்யாணம் நிகழவிருந்த பொழுது முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் அங்குக் குழுமிய காரணத்தால் வடகோடு தாழ்ந்து, தென்கோடு உயர்ந்தது.

சிவபெருமான் உருவத்தால் குறுகியவரும், பெருமையால் சிறந்தவருமான அகத்திய மாமுனிவரை அருகழைத்து ''அன்ப ! நீபொதிய மலைக்குச் சென்று இரு. அதனால் நிலம் சமமாகும்'' என்று ஆணை பிறப்பித்தார்.

''நம்திருமணக் காட்சியை அங்கேயே உமக்குக் காட்டுவோம். உலக நலன் கருதி நீசெல்லுக'' என்று சிவபெருமான் ஆணை பிறப்பித்த போது அகத்தியர் ''தேவ தேவ ! ஒரு புண்ணிய நதியைத் தர வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

சிவபெருமான் தமது சடாமுடியில் இருந்த காவிரி நதியை எடுத்து ஒரு கமண்டலத்தில் அடைத்து அகத்தியரிடம் கொடுத்தார்.

''காவிரியே ! அகத்தியர் கைகாட்டும் இடத்தில் நீபெருக்கெடுப்பாயாக'' என்று கட்டளையிட்டார்.

அகத்தியர் காவிரிநதி அடங்கிய கமண்டலத்துடன் தென்னகத்தை நோக்கிப் புறப்பட்டார். வழியில் குடகு மலையில் தங்கிச் சிவபூஜை செய்தார்.

அப்பொழுது இந்திரன் சூரபதுமனுக்கு அஞ்சி சீர்காழியில் தங்கியிருந்தான். அவன் சிவபூஜை செய்வதற்கு மலர்கள் கிடைக்கவில்லை.

மழையின்றிப் பயிர்களும் உயிர்களும் வாடி வதங்கியிருந்த போது அங்கு வந்த நாரதர் ''தேவேந்திரா, நீகணபதியை வழிபடுவாயானால் கருணையங்கடவுளாகிய விநாயகர் அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைத் தருவார். அதனால் தமிழ்நாடும், நின் நந்தவனமும் செழிக்கும்'' என்று ஆலோசனை கூறினார்.

இந்திரனும் அவ்வாறே கணபதியின் திருவுருவம் அமைத்துப் பால், தயிர், நெய், இளநீர், சந்தனம் முதலிய பொருள்களால் அபிசேகம் செய்து, பட்டாடை சாத்தித் தூபதீபம் காட்டிக் கணபதிக்கு உரிய காயத்திரி மந்திரத்தைக் கூறி

''தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்நோ கணேசப்ரசோதயாத்''

என உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி மனமொழி மெய்களால் வழிபாடு செய்தான்.

மூவருக்கும், தேவருக்கும் தலைவராகிய மகா கணபதி தேவேந்திரன் வேண்டிய வரத்தின்படியே அகத்தியருடைய கமண்டலத்தைக் கவிழ்க்கத் திருவுளம் கொண்டார்.

கணேசர் காக்கை வடிவம் கொண்டு தியானத்தில் இருந்த அகத்தியர், தம் அருகில் வைத்திருந்த கமண்டலத்தின் மேல் அமர்ந்தார்.

அகத்தியர் கையை நீட்டிக் காகத்தை ஓட்ட கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுக் காகம் பறந்தது.

காவிரியும் நாம் பெருகி ஓடும் காலம் இது தான் என்று கருதிப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

கணேசமூர்த்தி இவ்வாறு காவிரியை நல்கிய படியால் தமிழ்நாடு தழைத்தது. சீர்காழியில் தேவேந்திரன் வைத்த நந்தவனம் செழித்தது. **''காவிரி கண்ட கருணையங் கடவுள் கணபதி''** என்று விநாயகர் கொண்டாடப் பெற்றார்.

வளமான காவிரியின் வடகரையில் தேவாரப் பாடல் பெற்ற குடந்தை, வலஞ்சுழி, இன்னம்பர் ஆகிய திருத்தலங்களுக்கு நடுவில் அமைந்திருப்பது திருக்கொட்டையூர் எனும் திருத்தலமாகும்.

கொட்டைமுத்து எனும் ஆமணக்குச் செடிகள் மிகுந்திருந்தமையால் இவ்வூர் கொட்டையூர் எனப் பெயர்பெற்றது.

இத்திருத்தலத்தில் ஆமணக்குச் செடியின் கீழிருந்தே இறைவர் சிவலிங்கமாக வெளிப் பட்டுள்ளார்.

இத்திருத்தலத்தில் செய்யும் புண்ணியம் கோடியாகப் பெருகும். ஒரு பாவமும் அவ்வாறே கோடியாகக் கணக்கிடப்படும். ஆகவே இங்கு எழுந்தருளியிருக்கும் ஈசுவரர் கோடீஸ்வரர், விநாயகரும் கோடி விநாயகர், அம்பிகை கோடி அம்மையார், முருகர் கோடி முருகர், சண்டீசுவரர் கோடி சண்டீசுவரர் என அழைக்கப்படுகின்றனர்.

இவ்வைந்து மூர்த்திகளை இங்குத் தரிசித்தால் ஐந்து கோடி மூர்த்திகளைத் தரிசித்த பலன் உண்டாகும். இத்தகைய மகிமைமிக்க கொட்டையூரில் அத்திரி முனிவரின் மகனாரான ஆத்ரேயர் வந்து தவம் புரிந்தார்.

ஏரண்ட மரத்தடியில் தவமிருந்த அவரை யாவரும் ஏரண்ட முனிவர் என்றே அழைத்து வந்தனர்.

இவரே '' காவிரி காத்த கருணை மாமுனிவர்''



காவிரியை மீட்கத் தம்முயிர் கொடுக்க முன்வந்தார் ஏரண்ட மகரிஷி.

மண்ணுயிர்களைக் காக்கத் தன்னுயிர் கொடுக்க

காவிரி காத்த கருணை மாமுனிவர்

எனவும் போற்றப்படுகிறார்.

ஒரு மகாசிவராத்திரியன்று சிவபெருமானை வழிபட விரும்பிய ஆதிசேடன் பாதாளத்திலிருந்து திருவலஞ்சுழியருகில் வெளிவந்தான். சிவராத்திரியின் நான்கு காலங்களிலும் அவன் திருவலஞ்சுழி, திருநாகேஸ்வரம், திருப்பாம்புரம், திருநாகைக் காரோணம் ஆகிய நான்கு தலங்களிலும் வழிபட்டு மகிழ்ந்தான்.

ஆதிசேடன் பாதாளத்திலிருந்து வெளிப்பட்ட போது அங்கு ஒரு பெரும் பள்ளம் ஏற்பட்டு விட்டது. அப்பெரும்பள்ளத்தில் காவிரி பாய்ந்த போது அது பாதாளம் வரை சென்றபடியால், காவிரி முழுதும் அப்பள்ளத்தில் சென்று மறைந்து போனது.

இதனால் நாடு வறண்டது. காவிரித்தாய் பாதாளத்தில் மறைந்தாள் எனக் கேள்வியுற்ற மன்னனும் மக்களும் ''காவிரியை மீளப் பெறுவது எவ்வாறு?'' என மனக்வலை கொண்டனர்.

அப்போது ஓர் அசரீரி '' மன்னனோ அல்லது மாதவசியே அப்பள்ளத்தில் (பிலம்) மூழ்கித் தம்மைப் பலியிட்டுக் கொண்டால் பிலம் அடைப்பட்டுக்காவிரி மீளும்'' என்று அறிவித்தது.

முன்வந்த ஏரண்ட மகரிஷி தாமே பிலத்தினுள் மூழ்கி மகத்தான தியாகம் செய்தார்.

பிலத்தினுள் மூழ்கி மறைந்த போன காவிரி மீண்டும் வெளிப்பட்டுப் பெருகி ஓடி நாட்டை வளப்படுத்தியது.

பிலத்தினுள் மூழ்கித் தம்மைத் தியாகம் செய்த ஏரண்ட முனிவரும் இறையருளால் திருவலம்புரம் எனும் திருத்தலத்தில் வெளிப்பட்டார்.

ஏரண்ட முனிவரின் உயிர்த் தியாகத்தைக் காணப் பொறுக்காத அந்நாட்டு மன்னனும் முனிவரைத் தொடர்ந்து பிலத்தினுள் மூழ்கித் தம்முயிரைத் தியாகம் செய்தான்.

அம்மன்னனும் இறைவன் அருளால் உயிர் பெற்றுத் திருவலம்புரத்தில் கரையேறி முனிவரை வணங்கி, இறைவனையும் வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகின்றது.

காவிரி காத்த கருணைமாமுனிவராம் ஏரண்ட மாமுனிவரின் திருவுருவச்சிலை திருக்கொட்டையூர், திருவலஞ்சுழி, திருவலம்புரம் ஆகிய மூன்று திருத்தலங்களிலும் இருப்பதை நாம் இன்றும் கண்டு வழிபட்டு அம்மாமுனிவரின் மகத்தான தியாகத்தைக் கொண்டாடலாம்.

விநாயகருக்குப் பிடித்தமான நிவேதனங்கள்

-திருப்புகழ்மணி மு. அருணகிரி



விநாயகப் பெருமானை முழு முதற் கடவுளாகப் போற்றி வணங்கி வருவது இந்து மதம், தொல்காப்பியக் காலம் தொட்டு எல்லா காவியங்களும், சங்க நூல்களும விநாயகரது துதியைக் கொண்டே பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன.

கணேசரை நம் நாட்டில் மட்டுமல்ல, உலகம் பூராவுமே கொண்டாடி வந்துள்ளனர். கணேசரை நாம் 'கணேஷ்' என அழைப்பது போன்று கிரேக்கர்களும் ரோமானியர்களும் ஐரோப்பாவில் 'ஜேனஷ்' என்ற தெய்வத்தை முதல் முதலில் வணங்கிவிட்டு, பிறகு ஏனைய சடங்குகளை நிகழ்த்தி வந்துள்ளனர். இந்த கணேஷ் தான் அங்குள்ளவர்களால் ஜேனஷ் என்பதாக அழைக்கப்பட்டு வந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆங்கிலேயர்கள் வருடத்திற்கு 12 மாதம் என ஏற்படுத்தி முதல் மாதத்தை ஜேனஷ் என்ற தெய்வத்தின் பெயரால் அமைக்க எண்ணி, ஜனவரி எனப் பெயர் வைத்தனர். ஜேனஷ்தான் பிற்காலத்தில் ஜனவரி எனக் கூறப்பட்டதாக வரலாறு அறிவிக்கிறது. இதனால் ஏனைய தெய்வங்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு விநாயகப் பெருமானுக்கு ஏற்பட்டது.

ஏனைய தெய்வங்கள் அனைத்துக்கும் பொருந்தும் விதத்தில் பொதுவாகப் படைக்கும் நிவேதன பிரசாதங்கள் போல் அல்லாது, விநாயகருக்கு மட்டும் தனிப்பட்ட வகையில் நிவேதன வகைகளில் அவ்வையார் தமது பாடலில், பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நான்கினை மட்டும் கூறியுள்ள போதிலும் அதனையும் மிஞ்சிவிட்டார் அருணகிரியார்.

வயலூர் பொல்லாப் பிள்ளையாரே அருணகிரிநாதருடைய கவிகளுக்குத் ''திருப்புகழ்'' எனத் தலைப்பு தந்தவர். இது ஒரு தனிச் சிறப்பாகும். இதனைக் கருத்தில் கொண்டு அருணகிரியார் தாம் பாடியப் ''பக்கரை விசித்ரமணி'' என்னும் பாடலில் வயலூர் பொல்லாப் பிள்ளையாருக்குத் தன் பாடலில் தன்னுடைய நன்றியைச் சமர்பிக்கும் விதத்தில் 21 வகை நிவேதனப் பொருள்களின் பட்டியலை இப்பாடலின் பின் நான்கு அடிகளில் கூறியுள்ளார். இவர்க்கு முன்பும் சரி, பின்பும் சரி, எவரும் இது போன்று பட்டியலை விநாயகருக்கு அமைத்துப் பாடியதாக எங்கும் குறிப்புகள் காணவில்லை.

பாடலின் பின் 4 அடிகள் கீழே தரப் பட்டுள்ளன.

> **''இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப் பருப்புடனெய்**
> **எட்பொரி அவல் துவரை இளநீர்வண்**
> **டெச்சில் பயறுஅப்ப வகை பச்சரிசி பிட்டுவெள**
> **ரிப்பழம் இடிப்பல்வகை தனிமூலம்**
> **மிக்க அடி சிற்கடலை பக்ஷணமெனக்கொளொரு**
> **விக்கினசமர்த்தனெனும் அருளாழி;''**

1. இக்கு - கரும்பு
2. அவரை - அவரை
3. நற்கனிகள் - நல்ல பழங்கள்
4. சர்க்கரை - சர்க்கரை
5. பருப்புடன் - பருப்பு
6. நெய் - நெய்
7. எள் - எள்
8. பொரி - பொரி
9. அவல் - அவல்
10. இளநீர் - இளநீர்
11. வண்டு எச்சில் - வண்டின் எச்சில் எனப்படும் தேன்
12. பயறு - பயறு
13. அப்பவகை - அப்ப வகைகள்
14. பச்சரிசி - பச்சரிசி
15. பிட்டு - பிட்டு (அரிசி மாவினால் செய்யப்பட்டது)
16. வெளரிப்பழம் - வெள்ளரிப்பழம்
17. இடிப்பல்வகை - அரிசியை இடித்துச் செய்கின்ற மோதகம்
18. தனிமூலம் - ஒப்பற்ற கிழங்குகள்
19. மிக்க அடிசில் - சிறந்த உணவு வகைகளான சித்தரான்னம்
20. கடலை - கடலை
21. துவரை - துவரை

'பக்ஷணம் எனக்கொள் ஒரு விக்கின சமர்த்தன்' என்னும் அருளாழி - பக்ஷணமாகக் கொள்ளும் ஒப்பற்ற விக்ன சமர்த்தர் எனும் அருட்கடலே எனப் போற்றி வழிபடுகின்றார் அருணகிரிநாதர்.

விநாயகர் அருள் மழை

இராமகிருஷ்ணன், மும்பை

எந்தக்காரியம் தொடங்கும் முன்பும், கணபதி வழிபாடு அவசியம் என்பது சிவன் கொடுத்த வரம். சிவனே அந்த நியதியைக் கடைபிடிக்கவில்லை, திரிபுராசுரன் வதத்திற்குப் புறப்பட்டபோது. தகப்பனானால் என்ன? கணபதி வெகுண்டு, ரதம் புறப்பட்டதும் ரதத்தின் அச்சினை உடையச் செய்தாராம். சிவன் தமது தவறை உணர்ந்து கணபதியை வணங்கி அச்சினைச் சரி செய்து யுத்தத்திற்குப் புறப்பட்டு யுத்தத்தில் திரிபுரனை வென்றாராம். மதுராந்தகம் அடுத்த அச்சரபாக்கம் கிராமத்தில் உள்ள கணபதியே சிவன் தேர் அச்சு உடைத்த கணபதி என்பர். இந்தச் சம்பவத்தை அருணகிரியார் தமது திருப்புகழில் இவ்வாறு கூறுவார்.

''முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா!''

சிவனுக்கு நேர்ந்த நிலை போல் லலிதாதேவிக்கும் பண்டாசுரன் வதத்திற்குப் புறப்பட்ட போது தடங்கல் ஆகியது. சிவனை நோக்கி கணபதியை நினைத்து வணங்கிட விக்னேஸ்வரன் அருளால் விக்னயந்த்ரம் உடைய தேவி பண்டாசுர வதத்திற்கு புறப்பட முடிந்தது. இதனை லலிதா ஸஹஸ்ர நாமத்தில் வரும் இந்த சுலோகத்தால் அறியலாம்.

''காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீகணேஸ்வரா
மஹா கணேசநிர்பின்ன விக்ன யந்த்ர ப்ரஹர்ஷிதா''

தகப்பனார் தாயாரான சிவனும் பார்வதியும் கூட கணபதி முதல் வழிபாட்டுக்கு உட்பட்டவர்கள் என இதிலிருந்து தெரிகிறது. விக்னேஸ்வரர் - விக்னகர்த்தா- விக்ன ஹர்த்தா என்பர் - விக்னங்கள் செய்பவரும் அவர்; நீக்குபவரும் அவரே என்பதை இப்பெயர் குறிக்கும்.

சிவபார்வதியுடன் கைலாயத்தில் கணேசன் கந்தன் இரு புதல்வர்களும் சேர்நதிருந்த சமயம் நாரதர் ஒரு பழம் கொணர்ந்து சிவனிடம் கொடுத்தார். இந்தப் பழத்தை - முழுப் பழத்தை - ஞானப்பழத்தை தங்களது இரு புதல்வர்களில் யாராவது ஒருவருக்குக் கொடுக்கலாம். முழுதாக கொடுக்க வேண்டும் நறுக்கப்படாது என்றார். இரண்டு புதல்வர்களும் பழம் எனக்கு என்றனர். உலகை முதலில் வலம் வருபவர்களுக்கே பழம் என, முருகன் தனது மயில்வாகனமேறி விர்ரெனக் கிளம்பினார். பெரிய தொந்தியைத் தடவி சிறுமுஞ்சூர் வாஹன கணபதி சிறிது யோசனை செய்து சிவ பார்வதியை வலம் வந்து, ''நான் உலகை முதலில் வலம் வந்து விட்டேன் ஞானப்பழம் தாருங்கள்'' என்றார். உலகம் வலம் வரவில்லையே என வினவ, உலகம் யாவும் சிவனுள் அடக்கம். சிவனை வலம் வர உலகத்தை வலம் வருவதற்கு சமம் என்றார். மனமகிழ்ந்து பழம் கொடுக்கப்பட்டது. வலம் வந்த விநாயகர் கோயில் திருவலம் - வேலூர் அருகே உள்ளது. உலகம் வலம் வந்த கந்தன் அண்ணாவின் கையில் பழம் கண்டு தாய் தந்தையர் தமக்கு ஓரவஞ்சனை செய்தனர் என்று சினம் கொண்டு கோமணம், தண்டம் ஏந்தி பழனி மலையில் வந்து நின்றான். பார்வதி வந்து கெஞ்சி, ''நீயே ஞானப்பழம் அல்லவா '' என்றாள். பழநி ஸ்தலம் முருகனின் 3வது படைவீடு.



திருமால் உகந்த மண்மலர்

அ. நிறைமதி பி.எல்

ஒருமுறை நாரதர் சத்திய லோகம் சென்று பிரம்ம தேவரைத் தொழுது வணங்கி ''ஐயனே! திருமலைமேல் எழுந்தருளியிருக்கும் சீநிவாசப் பெருமானை எந்த மாதத்தில், எந்த நாளில் வழிபட்டால் அவர்தம் இன்னருளைப் பரிபூரணமாகப் பெறமுடியும்?'' என்று வினவினார்.

பிரம்ம தேவரும் ''மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்'' என்று பகவத்கீதையில் பெருமானே கூறியிருப்பதால் அவருக்கு உகந்த மாதம் மார்கழியே என்பதில் ஐயமில்லை. எனினும் மார்கழி மாதம் முழுவதும் பூசித்துப் பெறக் கூடிய இறையருளைப் புரட்டாசி மாதம் சனிக்கிழமை ஒரு நாளில் விரதம் இருப்பதனாலேயே பரிபூரணமாகப் பெற்றுவிட முடியும்'' என நாரதரிடம் அறிவித்தார்.

பூவுலகில் குருவை என்ற கிராமத்தில் பீமய்யா என்ற பெருமாளின் பக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார், இவர் ஒரு கால் ஊனமானவர். மண்பாண்டம் புனையும் குயவர். இவருக்குத் திருமலை சென்று சீநிவாசப் பெருமாளை வணங்க வேண்டும் என்பது பேரவா. ஆனாலும் கால் ஊனமுற்றவர் ஆதலால் மலைமேல் ஏறுதல் தம்மால் ஆகாதென அவர் வாளா இருந்தார்.

பெருமாள் பக்தர் ஆகிய பீமய்யாவிற்கு உதவி செய்ய வேண்டும் எனத் திருவுள்ளம் கொண்ட நாரதர் ஒருநாள் பீமய்யா காணத் தோன்றி ''பீமய்யா! புரட்டாசி மாதத்தில் ஒரு சனிக் கிழமை விரதம் இருந்து சீநிவாசபெருமாளைப் பூசித்தால் உனக்கு அவருடைய திருவருள் பரிபூரணமாகக் கிட்டும்'' என்று உபதேசித்தார்.

நாரதர் அறிவித்தவாறே பீமய்யாவும் புரட்டாசி மாதத்தில் ஒரு சனிக்கிழமை நாளன்று விரதம் இருந்தார், அன்று முதல் பெருமாள் பக்தராகி அவர் பெருமாளை நாள்தோறும் தீவிரமாக தியானித்துவரத் தொடங்கினார், மண்ணைப் பிசைந்து, சக்கரத்தைச் சுற்றிப் பாண்டங்களைப் புனையும் போதும் அவர் **''நாராயணா! கோவிந்தா!!''** என்றே பெருமாளைப் பிரார்த்தனை செய்வார்.

பானைகளைப் புனையும் கையோடு, மண்ணாலேயே சிறுசிறு மலர்களையும் உருட்டித் தம் எதிரில் திருமலை சீநிவாசப் பெருமாளே தோன்றி நிற்பதாகப் பாவித்து அம்மண்மலர்களைக் கொண்டு நாள்தோறும் அருச்சனை புரிவது பீமய்யாவிற்கு வாடிக்கை ஆகிவிட்டது.

பீமய்யா வாழ்ந்திருந்த காலத்தில் தான் திருமலைத் திருப்பணிகளைத் தொண்டைமான் என்னும் மன்னன் நிறைவேற்றியிருக்கிறான். அம்மன்னன் தினமும் பொன்மலர்களைக் கொண்டு பெருமாளைப் பூசிப்பது வழக்கம், பொன்மலர்களைக் கொண்டு பெருமாளைத் தினமும் பூசிக்கின்ற தன்னைக் காட்டிலும் சிறந்த பக்தர் வேறு எவரும் இருக்க முடியாது என்ற ஆணவமும் கூட அவனுக்கு இருந்து வந்தது,

வழக்கம் போல் அவன் ஒருநாள் காலை திருமலை சீநிவாசப் பெருமாளைப் பொன்மலர்கள் கொண்டு பூசித்துவந்தான். பெருமாள் சந்நிதியின் திருக்கதவுகளைச் சாத்தி ஏகாந்தமாகவே அவன் பெருமாளைச் சேவிப்பது வழக்கம். பொன்மலர்களைக் கொண்டு தொண்டைமான் பெருமாளை அர்ச்சித்தபொழுது மண்மலர்களும் இடைஇடையே விழுவதைக் கண்டு திகைப்பும் வியப்பும் எய்தினான் தொண்டைமான். அன்று முதல் தொடர்ந்து பல நாட்கள் தன்னுடைய பொன்மலர்களுடன் மண்மலர்களும் வந்து கலந்து விழுவதைக் கண்ட தொண்டைமான் 'பெருமாளே! இதன் காரணத்தை எனக்குத் தெளிவு படுத்தவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான்.

அவன் அவ்வாறு வேண்டிய நாளிரவே அவனுடைய கனவில் பெருமாள் தோன்றி ''பக்தனே! மண்மலர்களால் எம்மை அர்ச்சிப்பவன் மகாபக்தனாகிய பீமய்யா. அவன் எம்பால் எல்லையற்ற பக்தி கொண்டவன். அவன் பக்தியை மெச்சியே நீஅர்ச்சிக்கும் பொன் மலர்களைக் காட்டிலும் மேலாகப் பாவித்து அவனுடைய மண்மலர்களையும் ஏற்றுக் கொள்கிறோம்'' என்று திருவருள் புரிந்தார் திருமலை சீனிவாசபெருமாள்.

''துப்புடையாரை அடைவது எல்லாம்
சோர்விடத்துத் துணை ஆவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன்
யானைக்கு நீஅருள் செய்தமையால்
எய்ப்பெனை வந்து நலியும் போதுன்னை
ஏதும் நான் அங்கு நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்து அராவணைப் பள்ளியானே!''

என்பது பெரியாழ்வார் அருட்பாசுரம்.

பெற்றோருக்குச் செய்யும் சேவையே பெரிய சேவை

(நீதிக் கதை) - அருள்செல்வி

பெற்றோர்கள் சொன்ன பொன்மொழிகளைக் கேளாமல், மனம் போன போக்கில் வாழ்ந்து, செல்வமெல்லாம் இழந்து நாடோடியாகத் திரிந்து வந்த புண்டலீகன் என்பவன் ஒரு நாள் சத்திரத்தில் படுத்திருந்தான்.

கோரமான வடிவம் கொண்ட மூன்று பெண்கள் நள்ளிரவு நேரத்தில் தான் படுத்திருக்கும் சத்திரத்திற்கு அடுத்த வீட்டில் நுழையக் கண்டான் அவன்.

''யார் இந்த அகோரப் பெண்கள்'' என்று அவன் சிந்தித்திருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அப்பெண்கள் வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள்.

''என்ன ஆச்சரியம் !'' அந்த கோரப் பெண்கள் இப்போது அதிரூப சுந்தரிகளாக மாறி இருந்தார்கள்.

அவ்வதிரூபப் பெண்களை அணுகிய புண்டலீகன் ''நீங்கள் யார்? சற்றுமுன் பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்த நீங்கள், இப்போது அதிரூப சுந்தரிகளாக மாறிவிட்டீர்கள். உண்மையைக் கூறுங்கள்!'' என்று கெஞ்சி மன்றாடினான்.

'' கங்கை, யமுனை, சரஸ்வதி எனும் மூன்று நதிகளே நாங்கள். கோடிக்கணக்கான மக்கள் ஜீவநதிகளாகிய எங்களிடத்தில் பாவத்தை இறக்கிக் கொள்கிறார்கள். பாவச்சுமை அதிகரித்து எங்களுடைய உருவங்கள் கோரரூபம் கொள்ளும் போது, புண்ணிய ஆத்மாக்களைத் தரிசித்து நாங்கள் எங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்கிறோம்''.

''இதோ ! இந்த வீட்டிலிருப்பவர் தமது தாயும். தந்தையுமாகிய பெற்றோரை வணங்கி அவர்களுக்குச் சேவை செய்வதையே தம் முக்கிய கடமையாகக் கொண்டுள்ளார். பெற்றோரை வழிபடுவதை விட பெரிய பூஜை வேறில்லை என்று வாழ்ந்து வரும் இப்புண்ணிய ஆத்மாவைத் தரிசித்த பலனால் நாங்கள் எங்கள் கோர உருவம் நீங்கப் பெற்று இந்த அழகிய ரூபம் அடையப் பெற்றோம்'' என்று கூறி அந்த நதித் தேவதைகள் மறைந்து விட்டார்கள்.

''பெற்றோருக்குச் செய்யும் சேவையே பெரிய சேவை'' என்ற பேருண்மையை அன்றுதான் உணர்ந்தான் புண்டலீகன்.

திருந்திய உள்ளத்துடன் தன் ஊர் திரும்பி அது முதல் தானும் தன் பெற்றோர்களுக்குச் சேவை செய்வதைக் கடமையாகக் கொண்டான்.

ஒரு நாள் பகவான் நாராயணன் புண்டலீகன் வீட்டு வாசலில் வந்து நின்றார்: '' நான் உள்ளே வரலாமா?'' என்று கேட்டார்.

பெற்றோரின் சேவையில் ஈடுபட்டிருந்த புண்டலீகன் ''தயவு செய்து என் வேலை முடியும் வரை அந்த செங்கல் மீது நின்று காத்திருங்கள்'' என்று வாசலில் இருந்த செங்கல்லைக் காட்டினான்.

பகவான் நாராயணனும் புண்டலீகன் காட்டிய செங்கல் மீது ஏறி நின்று அவன் வரும் வரை காத்திருந்து கடவுள் சேவையை விட பெற்றவர் சேவையே மேலானது என்பதை ஞாலத்திற்கு உணர்த்தினார்.

''விட்'' என்றால் வடமொழியில் செங்கல் எனப் பொருள் படும். செங்கல் மேல் நின்ற நாராயணனுக்கு விட்டலன் என்பது ஒரு திருநாமமாக அமைந்தது.

புண்டலீகனின் பெற்றோர் பக்தியைக் கண்டு அதிசயித்தவாறு பாண்டுரங்க விட்டலன் இன்றும் நின்றகோலத்தில் தரிசனம் தருவதை விட்டலாபுரத்தில் தரிசித்து மகிழலாம்.

என்றும் இறைபணியில்

செந்தில்குமார் டெக்ஸ்டைல்ஸ் ஏ/சி

பட்டு மாளிகை

எஸ். வி. கே. டவர்ஸ்,

சித்த வீரப்ப செட்டி தெரு,

தருமபுரி - 1

போன் : 267581, 267582

குரு கற்றுத்தரும் பாடம்

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

தெய்வத்தினுடைய அனுக்ரகம் என்பது எல்லா மகான்களிடையேயும் நிறைந்து காணப் படுகிறது. தனக்கென்று வாழாத அந்தப் பெரியோர்கள் மற்றவர்களுக்கு வாரி வழங்குவதற்காகவே தெய்வத்தின் மகாசக்தி அவர்களுக்குள் இறங்கியிருக்கிறது. ஆனால், தெய்வத்தின் அனுக்ரகத்தை, தெய்வம் கொடுத்த வரத்தை அவர்கள் எல்லா இடத்திலும் வாரி வழங்கி விடுவதில்லை. மாறாய் அவர்களுடைய கூர்த்த மதியினைப் பயன்படுத்தி பல எளிய விஷயங்களை சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறார்கள்.

ஸ்ரீ ராகவேந்திரர் க்ஷீரசங்கி என்ற ஒரு சிறிய நகரத்தைக் கடந்து கொண்டிருக்கும் போது அங்கேயிருந்த ஒரு பாளையக்காரன் அதாவது அந்த நகரத்தினுடைய தலைவன் மத வேறுபாட்டின் காரணமாக அந்தணர்களைக் கடுமையாக இம்சித்து வந்தான்.

அந்தணர்களுடைய சொத்துக்களை எல்லாம் கவர்ந்து அவர்களை நிராதரவாக்கி நீங்கள் இந்த நகரத்தை விட்டு ஒழிந்தால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. மாறாய் சந்தோஷப் படுவேன் என்று இழிவுபடுத்தினான்.

அந்தணர்கள் போகுமிடமறியாது திகைத்தார்கள். அவனையே கெஞ்சிக் கூத்தாடி நகரத்தின் ஓரத்தில் எந்தவித வருமானமும் இன்றி இழிவுபட்டு வாழ்ந்தார்கள்.

ஸ்ரீராகவேந்திரர் க்ஷீரசங்கி வந்ததும் கடந்த காலத்தில் தங்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தைச் சொல்லி என்ன செய்வது என்று தெரியவில்லையே என்று புலம்பினார்கள். வறுமையின் உச்சகட்டத்திற்கு வந்து விட்டோம் என்று அழுதார்கள்.

மகான் ஸ்ரீ ராகவேந்திரர் அவர்களுக்கு மனமிரங்கினார். என்ன செய்வது என்று யோசித்தார்.

அந்தப் பாளையக்காரனுக்கு அழகான மூன்று வயது குழந்தை இருந்தது. பார்வைக்குக் கடுமையானவனாக இருந்தாலும் தன் மகனுக்கு அவன் இனிமையானவனாகவே இருந்தான். குழந்தையைப் பராமரிக்க தாதிகளை நியமித்தான். தாதிகள் அயர்ந்திருக்கின்ற சமயம் பார்த்து அந்தக் குழந்தையை ஸ்ரீராகவேந்திரருடைய சேவகர்களில் ஒருவன் கவர்ந்து வர அந்தக் குழந்தையை



அருகிலுள்ள மலைக்கு எடுத்துச் சென்று அங்குள்ள குகையில் சில பெண்களை நியமித்து விளையாட்டுக் காட்டி வைத்திருக்கும் படி ஸ்ரீராகவேந்திரர் பணித்தார்.

அவ்விதமே நடந்தது.

பல வேலைகளில் ஈடுபட்டிருந்த பாளையக் காரன் திடீரென்று துணுக்குற்று ''குழந்தை எங்கே? சிறிது நேரமாக குழந்தையின் குரலைக் காணோமே'' என்று கேட்க எல்லோரும் அந்தக் குழந்தையைத் தேடத் துவங்கினார்கள்.

இங்கிருக்கிறது என்று நினைத்தேனே, அங்கிருக்கிறது என்று நினைத்தேனே என்று ஒருவரையொருவர் மாற்றி மாற்றிக் குற்றம் சாட்டிக்

கொண்டார்கள்.

பாளைக்காரன் பதறினான். ஊர் முழுவதும் தேடும்படி கட்டளையிட்டான். குழந்தை காணோமே என்று வாடி வருந்தினான். என்ன செய்வது ... என்ன செய்வது என்று எல்லோரையும் கேட்டான்.

இந்த ஊருக்கு ஒரு மகான் வந்திருக்கிறார். அவரைக் கேட்போமா என்று அருகிலுள்ளோர் ஆலோசனை சொல்ல அவர் எந்தக் குலம் என்று கேட்டான்.

அந்தணர் என்று மற்றவர் பதில் சொல்ல

அந்தணர்களை நான் ஆதரிப்பதில்லையே என்று மனம் மறுகினான்.

''இப்பொழுது அவரிடம் போய் நிற்க வேண்டுமா'' என்று வெட்கப்பட்டான். குழந்தை முக்கியமா, குலம் முக்கியமா என்று மற்றவர்கள் வினவ, அவன் வெட்கத்தை விட்டு ஸ்ரீராகவேந்திரர் முன்பு என் குழந்தையைக் காணோம் என்று கைகூப்பினான்.

அவரிடம் விஷயத்தைச் சொல்லும் போது அவன் குரல் தழுதழுத்தது. ஏன், எப்படி என்று விசாரிக்க அழுகை வந்தது.

ஸ்ரீ ராகவேந்திரர் சிறிதுநேரம் கண்மூடி அமர்ந்திருந்தார்.

''உன் பிள்ளையை யாரோ கவர்ந்து விட்டதாகவா நினைக்கிறாய்''.

''ஆமாம், ஆமாம்'' என்று அவன் அரற்றினான்.

''அப்படியானால் மற்றவர் பொருளை நீ கவர்ந்திருக்க வேண்டுமே'' என்று அழுத்தம் திருத்தமாக கேட்டார். அவன் முதலில் இல்லை என்றான். பிறகு ஆமாம் என்றான்.

''யார் பொருளைக் கவர்ந்தாய்'' என்று மேலும் விசாரித்தார்.

''இங்குள்ள அந்தணர் சொத்துக்களைக் கவர்ந்தேன்''.

''அதனால்தான் உன் குழந்தை கொள்ளை போயிற்று. நீ கொள்ளையடித்ததால் உன் சொத்து காணாமல் போயிற்று'' என்று சுட்டிக் காட்டினார்.

''அப்படியானால் இதற்கு என்ன அர்த்தம்''.

''மற்றவர்களின் சொத்துக்களைக் கொடுத்து விடு. உன் சொத்து தானாகக் கிடைக்கும்''.

''நிச்சயம் செய்கிறேன். எனக்குக் குழந்தை முக்கியம்... எனக்குக் குழந்தை முக்கியம்'' என்று அவ்வூர் அந்தணர்களை அரவணைத்து அவர்களிடமிருந்து கவர்ந்து போன சொத்துக்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து அவர்களை இனி துன்புறுத்த மாட்டேன் என்று வாக்குறுதியும் கொடுத்தான்.

இது நடந்து கொண்டிருக்கும் போதே ஸ்ரீராகவேந்திரர் சைகை செய்ய, குகையிலிருந்த குழந்தை கொண்டு வரப்பட்டு அவன் வீட்டுக் கொல்லை ப்புறத்திலுள்ள வைக்கோல் போரில் துணி போடப்பட்டு அதன் மீது குழந்தை கிடத்தப்பட்டது.

எல்லா இடங்களிலும் தேடிப்பார்க்க ஸ்ரீராகவேந்திரர் உத்தரவிட மறுபடியும் தேடிப் பார்க்கப்பட்டு குழந்தை கண்டுபிடிக்கப்பட்டது. வைக்கோல் போரிலேயே உறங்கிவிட்டதால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் சொல்லப்

வாசகர் எண்ணங்கள்

அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ''ஓர் அரிசி'' - அன்னதான மகிமையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறி எங்களை நெகிழ வைத்தது.

- இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி அஞ்சல், கரூர் மாவட்டம்.

''திருக்கோயில்'' இதழில் வெளிவரும் எல்லாக் கட்டுரைகளும் நன்றாக உள்ளன. ''சொற்பொழிவு கேட்கும் சேவல்'' சுவையான தகவல்.

- என். எஸ். சீனிவாசன், ஆழ்வார் திருநகர்.

சென்னை காளிகாம்பாளைச் சத்ரபதி சிவாஜி வழிபட்ட சிறப்பைப் படித்து மகிழ்ந்தேன். ''வரகூரில் உறியடி உற்சவம்'', ''ஆதிபுரியின் அதிகார நந்தி'' - என ஒவ்வொரு கட்டுரையும் அருமை.

- திருமதி பிரேமா விநாயகம், சென்னை - 600015.

''பலவகை மிருகங்களும், பறவைகளும் வழிபாடு செய்த தலங்கள்'' - பட்டியலைப் பாராட்டுகின்றேன்.

- திருமதி இந்திரா ஆராஅமுதன், திருவரங்கம்.

''சிற்பங்கள் அறிவோம்'' தாராபுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில் பெரிய புராணச் சிற்பங்கள் - மிக்க பயனுள்ள கட்டுரை.

- க. ஸ்ரீதரன், திருச்சி.

பட்டது.

இது பாளையக்காரன் திருந்த வேண்டு மென்றே செய்யப்பட்ட ஒரு நாடகம் ஆகும்.

தெய்வபலத்தால் அந்த பாளையக்காரனை நிந்தித்திருக்கலாம்; அவனுக்கு ஊறு ஏற்படும் வண்ணம் அந்த மகான் சபித்திருக்கலாம். ஆனால், அவைகளைச் செய்யாமல் ஒரு சிறிய தந்திரத்தின மூலம் உனக்கு வலிக்கிறபடி தானே மற்றவருக்கும் வலிக்கும். எனவே பிறரை நோகப்பண்ணாதே என்று சொல்வதற்குண்டான நாடகத்தை மகான் நடத்திக்காட்டினார்.

ஒரு மணிநேரத் துடிப்பால் தான் வருடக் கணக்கில் செய்த மகாபாதகங்கள் அப்பாளையக் காரனுக்கு விளங்கிவிட்டன.

மகான்களுடைய கருணை அற்புதமானது. சமூகத்தவர்களுக்கு ஊறுசெய்தவர்களுக்கு மட்டும் அவர்கள் பாடம் நடத்தவில்லை. தங்களுக்குப் பிரியமாக இருக்கின்ற, தன்னைக் குருவாக ஏற்றுக் கொண்டிருக்கிற சீடர்களுடைய வளர்ச்சியைக் குறித்தும், நடவடிக்கை குறித்தும் அவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அதற்காகவும் அவர்கள் பாடம் நடத்துவதுண்டு.

காஞ்சி காமகோடி மடத்தின் முன்னாள் பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் தன் மடத்தைச் சார்ந்த வேதம் படிக்கின்ற மாணவர்களோடு உட்கார்ந்திருந்தார். வேதபாடம் பற்றிய கேள்விகளை அவர்களிடம் கேட்டு அவர்களது ஞானத்தை தெளிவுபடுத்தி அவர்களை உற்சாகப் படுத்துவதற்காக உரையாடிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். திடீரென்று சல்லாபித்துக் கொண்டு இருந்த மகாப்பெரியவாள் மௌனமாகி விட்டதைப் பார்த்து மாணவர்கள் திகைத்தார்கள்.

''ஏன் அமைதியாகிவிட்டீர்கள்?'' என்று ஒரு மாணவன் துணிந்து கேட்டான்.

''எனக்கு நல்ல சீடர்கள் இல்லை என்ற வருத்தம் ஏற்பட்டது. அதனால்தான் மௌன மாகிவிட்டேன்'' என்று அவர் பதில் சொன்னார்.

மாணவர்கள் மலங்க விழித்தார்கள்.

ஆதிசங்கரருக்குப் பத்மபாதர் என்ற அற்புதமான சீடர் இருந்தார். அவர் எதிர்கரையில் துணிதுவைத்துக் கொண்டிருந்த போது குரு கையசைத்துக் கூப்பிட, துவைத்த துணியைப் போட்டு விட்டுக் குறுக்கே ஆறு இருக்கிறது என்று தெரியாமல் குரு கூப்பிடுவதற்கு உடனே போக வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆற்றில் கால் வைத்து நடந்து வர, அவர் பாதத்திற்கு மிகப்பெரிய தாமரை வளர்ந்தது. அந்தத் தாமரையில் கால்வைத்து அவர் குருவிடம் வந்து ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார். ஆதிசங்கரர் அவர் வந்தவழியே பூத்த தாமரைகளை சுட்டிக் காட்டினார். அன்றிலிருந்து அவருக்குப் பத்மபாதர் என்ற பெயர் வந்தது. ''இப்படியொரு அற்புதமான சீடர்தனக்குக் கிடைக்கவில்லை. ஆதிசங்கரர் செய்த தவம் நான் செய்யவில்லை'' என்று வருத்தப்பட்டு மகாபெரியவாள் சொல்ல மற்ற எல்லா மாணவர்களும் தலைகுனிந்தார்கள். சில மாணவர்கள் நெஞ்சு நிமிர்த்தினார்கள். தைரியத்தை வரவழைத்துக் கொண்டார்கள்.

''அப்படிச் சொல்லாதீர்கள் பெரியவா! நீங்கள் என்ன சொன்னாலும் கேட்பதற்கு நாங்கள் சித்தமா இருக்கிறோம்'' என்று ஓரிருவர் கூட்டாகப் பதில் சொன்னார்கள்.

''அப்படியா! நான் என்ன சொன்னாலும் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறீர்களா! அப்படி யிருக்க முடியுமா?'' என்று மகாப்பெரியவர் கேட்க, ''முடியும்'' என்று ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு

என்று பல மாணவர்கள் கை தூக்கினார்கள்.

ஆச்சாரியர் முகம் மலர்ந்தார்.

''நீங்கள் எவ்வளவு தூரம் என்னுடைய சொல்லுக்குக் கட்டுப்படுகிறீர்கள் என்று ஒரு சோதனை வைக்கிறேன். அதோ அந்த தூணுக்கருகே ஒரு அம்மையார் நிற்கிறார். தெரிகிறதா?'' என்று ஒரு அம்மையாரைச் சுட்டிக் காட்டினார்.

அவர்கள் எழுபது வயது விதவை. அவருடைய அந்தணக் குலத்துக்கேற்ப தலை மழித்து நார்மடியோடு ரவிக்கை அணியாது, நெற்றியில் விபூதி மட்டும் தரித்து ருத்ராட்சத்தோடு இருந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடனேயே எல்லோருக்கும் அவர் ஒரு விதவை என்பது தெரிந்தது. அவரைச் சுற்றி நல்ல திடகாத்திரத்துடன் அவர் வீட்டு ஆண்கள் சுற்றி இருந்தார்கள். அந்தப் பெண்மணியிடம் மிக மரியாதையாகப் பேசினார்கள்.

''தெரிகிறது. அந்த அம்மையார் உங்கள் தரிசனத்திற்காகக் காத்திருக்கிறார்கள்'' என்று மாணவர்கள் பதில் சொன்னார்கள்.

உங்களில் யாரேனும் ஒருவர் அங்கு போய் அந்த அம்மையாரைப் பார்த்து ''நீங்கள் சுமங்கலியா என்று கேட்கவேண்டும். கேட்பீர்களா?'' என்று வினவினார்.

சீடர்கள் திகைத்தார்கள்.

பார்த்தவுடன் அந்த அம்மையார் ஒரு பிராமண விதவை என்று தெரிகிறது. அவரிடம் போய் நீங்கள் சுமங்கலியா என்ற கேள்வியை எப்படிக் கேட்பது? அது கேலிக்குரியதாக ஆகாதா? மனதைப் புண்படுத்தாதா? ஒரு பெண்ணை இழிவுப்படுத்தக்கூடிய செயலை மகாப்பெரியவர் செய்யச் சொல்கிறார். அதுவும் நம்மைச் செய்யச் சொல்லி வேடிக்கை பார்க்கிறார்.

அவர்கள் திகைத்தார்கள்.

''எப்படிக் கேட்பது?'' என்று கேள்வியோடு மகாப்பெரியவரைப் பார்த்தார்கள்.

''இதனால்தான் சொல்கிறேன். எனக்கு நல்ல சீடர்களே இல்லை. ஆதிசங்கரருக்கு ஒரு பத்மபாதர் கிடைத்தார். கூப்பிட்டவுடன் உடனே எதையும் எதிர்பார்க்காமல் குறுக்கே ஓடுகின்ற கங்கை ஆற்றைக் கடந்து வந்தார். ஆனால், நீங்கள் நான் உத்தரவிட்டபிறகும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறீர்கள். கேட்பதா, வேண்டாமா என்று யோசிக்கிறீர்கள். என்ன, இப்படியெல்லாம் கேட்கச் சொல்கிறானே என்று ஏளனமாய் வேறு என்னைப் பார்க்கிறீர்கள்'' என்று சொல்ல மாணவர்கள் பதறினார்கள்.

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட மாணவரிடம் ''நீபோய் கேட்டு வா'' என்று சொல்ல, அவன் உயிரே போனது போல முகத்தை வைத்துக் கொண்டான். மெல்ல நடந்தான். அந்த அம்மாள் அருகே போய் நின்று தன்னுடைய மற்ற மாணவர்களை மிகப் பரிதாபத்துடன் பார்த்தான். அனேகமாக இந்தக் கேள்வியைக் கேட்டதும் சுற்றியிருப்பவர்கள் பொத் பொத்தென்று அடிப்பார்கள். நாலைந்து அடியாவது விழும். ஆட்கள் பலமாக இருப்பதால் அடியும் பலமாக இருக்கும். வேறு வழியில்லை. அதிகம் அடிவிழும் முன்பு காப்பாற்றிவிடுங்கள் என்பது போல நண்பர்களைப் பார்த்துவிட்டு அவன் அந்தப் பெண்மணியைப் பார்த்துத் தொண்டையைச் செருமினான்.

அந்தப் பெண்மணி, வேதபாடம் படிக்கின்ற கட்டுக்குடுமி பையன் என்பதால் மிகக் கனிவாகப் பார்த்து ''என்னடா குழந்தை! என்ன வேண்டும்?'' என்று கேட்க அவன் சுதாரித்துக் கொண்டான்.

''நீங்கள் சுமங்கலியா?'' என்று மகாப் பெரியவர் கேட்டுக் கொண்டு வரச்சொன்னார் என்று தான் கேட்காது, கேள்வியை மகாப்பெரியவர் கேட்டதாகச் சொல்லிவிட்டான். அந்த அம்மாள் மிகுந்த சந்தோஷமடைந்தார்.

''ஆமாம். நான் சுமங்கலிதான். நான் சுமங்கலி என்பது அவருக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறதா! என் ஊர் சுமங்கலிதான். இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாரா? எத்தனை வருடத்திற்கு முன்பு என் வீட்டிற்கு வந்தார். இத்தனை வருடத்திற்குப் பிறகும் என்னை இந்தக் கோலத்தில் கண்டபிறகும் நான் சுமங்கலியா என்று கேட்கிறாரே! என்ன ஞாபக சக்தி. எவ்வளவு கூர்த்தமதி. என் குடும்பத்தின் மீது என்ன கருணை''

அந்த அம்மாள் புலம்பத் துவங்கிவிட்டார்.

அந்தப் பையனுக்கு மெல்ல அவர் விசாரித்து வரச்சொன்னது அந்த அம்மாளின் யோக்கியதையை அல்ல. அந்த அம்மாளின் ஊரை என்பது புரிந்தது. சுமங்கலி என்ற ஊரைச் சேர்ந்தவர் அந்த அம்மாள் என்பது தெரிந்தது. தப்பித்தோம், பிழைத்தோம் என்று அவர் மகாப்பெரியவரிடம் வந்து கைகூப்பி பிறகு நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கினார்.

குருவின் சொல்லை எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் எவர் ஒருவர் ஏற்றுக் கொள்ளு கிறாரோ அவருக்கு எந்த ஆபத்தும் கிடையாது. மாறாக நல்ல மதிப்புக் கிடைக்கும் என்பது தான் ஒரு சத்தியமான விஷயம்.

புரட்டாசியில் நாயன்மார் திருநட்சத்திரம்



உருத்திர பசுபதியார் - அசுவினி
திருநாளைப்போவார் - ரோகிணி
நரசிங்கமுனையரையர் - சதயம்
ஏனாதிநாதர் - உத்தராடம்

குருபகவான் தவம் இருந்த குருவித்துறை

கலைவாணன், செயல் அலுவலர்

குருபார்க்கக் கோடி புண்ணியம், வியாழன் பார்த்தால் விரைந்திடும் திருமணம், புண்ணிய குரு பார்க்க புத்திரபாக்கியம் கிட்டும் என்பன பழமொழிகள்.

நவக்கிரகங்களில் சுபகிரகங்கள் மூவர். அவர்களில் தலையாய நன்மை செய்பவர் குருபகவானே.

குருபகவானுக்குரிய கோவில்களில், மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே குருவித்துறையில் அமைந்துள்ள சித்திர ரத வல்லப் பெருமான் கோவில் தலையாயது ஆகும். இந்தக் குருதலத்துத் தரிசனம் நம்மை தூய இன்பவாழ்வுக்கு ஏற்றிடும் ஏணி. பிறவிக்கடலைக் கடக்க உதவும் தோணியாகும்.

இனி குருவும், தெய்வமும் ஆகி விளங்கும் குருவித்துறை கோவில் வரலாற்றைக் காண்போம்.



அமிருதசஞ்சீவினி மந்திரத்தைத் தெரிந்து கொள்ளாமல் அரக்கர்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை தேவர்களுககு ஏற்பட்டது. குருபகவானின் மகனான கச்சனை, மந்திரம் தெரிந்து கொள்ள அனுப்பி வைத்தார்கள். திரும்ப வரும்போது பிரம்மச்சாரியாக வரவேண்டும் என்று ஒரு சத்தியம் மட்டும் வாங்கிக் கொண்டார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. அசுர குருவான சுக்ராச்சாரியாரின் அன்பைப் பெற்று குருகுல கல்வி கற்று அமிருதசஞ்சீவினி மந்திரத்தை உபதேசிக்க வேண்டும் என்றால் அவரது மகள் தேவயானி உதவினால் மட்டுமே முடியும் என்ற நிலை.

கச்சனும், சுக்கராச்சாரியாரின் குருகுலத்தில் சேர்ந்தான். குருவின் அன்பையும் அவரது மகள் தேவயானியின் அன்பையும் ஒருங்கே பெற்றான். கச்சன் யார் என்ற உண்மையைத் தெரிந்து கொண்ட மற்ற அரக்கர்கள், அவன் உயிரோடு இருந்தால் அசுர குலத்திற்கு ஆபத்து என்று கருதிக் கொன்றும் விடுகிறார்கள். அதோடு மட்டும் நிற்காமல் கச்சனைத் தீயிலிட்டுச் சாம்பலாக்கி, அந்தச் சாம்பலை சுக்ராச்சாரியார் அருந்தும் பானத்தில் கலக்கிக் கொடுத்துவிட்டனர்.

கச்சனை எங்கும் காணாத தேவயானி தன் தந்தையின் ஞானதிருஷ்டியால் கச்சனின் இருப்பிடத்தைக் காட்டும்படி கேட்கிறாள். அசுரகுருவும் அப்படியே செய்ய கச்சன் தன் வயிற்றில் இருப்பதைக் கண்டறிந்து தேவயானியைத் தேற்றுகிறார். அந்தப் பெண்ணோ கச்சனை மீட்டுத்தரும்படி தந்தையிடம் கேட்கிறாள். சுக்ராச்சாரியாரும் தன் வயிற்றில் இருக்கும் கச்சனுக்கு அமிருதசஞ்சீவினி மந்திரத்தை உபதேசம் செய்து உயிர்ப்பிக்கிறார். சுககராச்சாரியாரின் வயிற்றைக் கிழித்து வெளியே வந்ததில் சுக்ராச்சாரியார் மரணத்தை முத்தமிடுகிறார்.

உயிர் பெற்று வந்த கச்சன், சுக்கராச்சாரியார் இறந்து கிடப்பதைக் கண்டு, தான் அவரிடம் உபதேசம் பெற்ற அமிருதசஞ்சீவினி மந்திரத்தாலேயே சுக்கராச்சாரியரை உயிர்பெறச் செய்கிறார்.

பின்னர் சுக்ராச்சாரியாரிடம் கச்சன், தான் தேவலோகம் செல்ல அனுமதிக்கும்படி கேட்கிறான். சுக்கராச்சாரியார் தன் மகள் தேவானியை மணம் முடித்துச் செல்லும்படி வேண்டுகிறார். அதற்குக் கச்சன் தான் பிரம்மச்சாரியாக திரும்பி வருகிறேன் என்று தந்தையிடம் சத்தியம் செய்திருப்பதை தெரிவிக்கிறான். அதுவும் போக, தற்சமயம் தங்கள் வயிற்றில் இருந்து தோன்றியதால் தேவயானி எனக்குத் தங்கை முறை ஆகிறது என்று பக்குவமாக எடுத்துச் சொல்லித் தேவலோகப் பயணத்தை மேற் கொள்கிறான்.

தேவயானி எவ்வளவோ தடுக்கிறாள். அதனை மீறிக் கச்சன் போகிறான். இதனால் கடுங்கோபம் கொண்ட தேவயானி தன் இஷ்ட தேவதைகளை பிரார்த்தித்துக் கச்சனைச் சப்தமலைகளாலும் தடுத்துத் தேவலோகம் செல்ல முடியாமல் கட்டுண்டு கிடக்கச்சாபமிடுகிறாள்.

ஞான திருஷ்டியால் இதனைப் பார்த்த குருபகவான், வேகவதி என்ற வைகை நதிக் கரையில் துறை அமைத்துக் கொண்டு தபசில் இருக்கிறார்.

அவர்தம் தவத்தை மெச்சிய பகவான் நாராயணன் சித்தர வேலைப் பாடுகளுடன் அமைந்த தேரில் குருபகவானுக்குக் காட்சியளித்து கச்சனை மீட்டுக் குருபகவானிடம் சேர்ப்பிக்கிறார். பின்னர் குருபகவானுக்குச் சித்திர ரத வல்லபர் என்ற

நாமத்தைச் சூட்டித் தான் துறை அமைத்த வேகவதி நதிக்கரையில் பிரதிஷ்டை செய்கிறார். இதுவே இந்தக் கோவிலின் தல வரலாறு. இந்தியாவிலேயே குருபகவான் நாராயணனை நோக்கித் தவம் செய்யும் இடம் இதுவாகத்தான் இருக்கும்.

கோவிலின் மூலவர் மற்றும் பூமாதேவி, ஸ்ரீதேவி ஆகிய மூவரும் 10 அடி உயரமும் 6 அடி அகலமும் உள்ள ஒரே சந்தனமரத்தில் செதுக்கப் பட்டு உள்ளது. பழுதாகாமல் பாதுகாப்பதற்காக வருடத்தில் 3 மாதம் தைலம் சாத்திப் பாதுகாக்கிறார்கள்.

நேராக வரும் வைகை நதி இந்த இடத்தில் வளைந்து செல்கிறது. குருபகவானைத் தரிசிக்க வைகை நதியே இவ்விடத்தில் வளைந்ததாக ஒரு ஐதீகம் உண்டு.

அது திரேதாயுகம் முடிவுக்கு வரும் காலகட்டம். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஓயாத போர். முடிவில் தேவர்கள் தோல்வியைத் தழுவினர். வெற்றி பெற்ற அரசுரர்களால் பல இன்னல்கள் தேவர்களுக்கு ஏற்பட்டது. அந்த நேரத்தில் நவக்கிரக அரசனான குருபகவானை பூவுலகம் சென்று தவம் இருக்கச் சொல்கிறார் இந்திரன். நாகமலை அடிவாரத்தில் ஓடிக் கொண்டிருக்கிற வைகை ஆற்றின் கரையில் தவம் இருக்கிறார் குருபகவான். இந்தத் தவத்தால் மகாவிஷ்ணு வந்து அரக்கனை அழிக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்காகவே குருபகவான் தவத்தை மேற்கொள்கிறார்.

இதைக் கண்டு ஆத்திரம் கொண்ட அரக்கன் தனது 12 பிள்ளைகளையும் பல ரூபத்தில் சென்று குருவின் தவத்தைக் கலைத்து விடும்படி ஏவி விடுகிறான். தவத்தைக் கலைக்க வந்த அசுர குழந்தைகள் குருபகவானின் கோபத்துக்கு ஆளாகி சாபத்தால் பன்றிக்குட்டிகளாக மாறுகின்றன. 12 பன்றிக்குட்டிகளும் பசிக்குப் பால் இன்றி துடிக்கின்றன. இந்தக் காட்சியை காண மனம் பொறுக்காத சோமசுந்தரக் கடவுள் பன்றியாக உருவம் கொண்டு பன்றிக்குட்டிகளின் பசியைப் பால் கொடுத்துப் போக்குகிறார். இதைப் பார்த்த இந்திரன் அதிர்ச்சி அடைகிறான். இந்தப் பன்றிகள் பெரிதாக வளர்ந்தால் பூலோகம் அழிந்துவிடும் என்கிறார். அப்போது அரக்கனின் அட்டகாசமும் அதிகரிக்கிறது.

அதைக் கண்டு கோபம் கொண்ட மகாவிஷ்ணு தன்னுடைய ஆயுதமான சக்கரத்தை வீசி எறிந்து அரக்கனை அழித்து வர அனுப்புகிறார். சக்கரமானது சீறிப்பாய்ந்து அரக்கனை அழித்துவிடுகிறது. மறுகணமே பாதாளத்தில் சுயம்புவாக மாறி விட்டது. அவரே சுயம்பு சக்கரத்தாழ்வார் எனப்படுகிறார்.

மகாவிஷ்ணு, தான் அனுப்பிய ஆயுதம் மீண்டும் தன்னிடம் வந்து சேரவில்லையே என்று

பூலோகம் தேடிவருகிறார். அழகு ரூபத்தில் சித்திரை மாதம் பவுர்ணமி நாளன்று ஆயிரம் வர்ணங்கள் கொண்ட ரதத்தில் ஏறி வருகிறார். இங்கு வந்து பார்த்த மகாவிஷ்ணுவுக்கு சுயம்புவாக சக்கரத்தாழ்வார் காட்சி கொடுக்கிறார். குருவும் மகாவிஷ்ணுவைப் பார்த்து வணங்கி தேவ உருவமாக மாறுகிறார்.

சுயம்பு சக்கரத்தாழ்வார் அருகே குருபகவானும் அமர்ந்து கொள்கிறார். மகாவிஷ்ணுவும் குருவைப்பார்த்துப் பன்றிக் குட்டிகளின் சாபத்தை மீட்டு விடும்படி கேட்கிறார். குருவும் மகாவிஷ்ணுவின் சொல்லுக்கு இணங்கி 12 பன்றிக்குட்டிகளையும் 12 மந்திரிகளாகத் திருவருள் புரிகிறார்.தங்களுக்காக பன்றியாக மாறிப் பால் கொடுதத சோமசுந்தர கடவுளின் கருணை உள்ளத்தை நினைத்து மனம் உருகி உருகி.... சிவாலயங்களைக் கட்டுகிறார்கள். தென்கரை மூலநாத சுவாமி கோவில், திருவேடகம், திருப்புவனம், தஞ்சாவூர், மகாபலிபுரம் இதுபோன்ற பல சிவாலயங்களை கட்டி முடிக்கிறார்கள். இந்தக் காட்சிகளைப் பார்த்து பரவசம் அடைந்த மகாவிஷ்ணு சந்தனமரமாகக் காட்சி தருகிறார். அப்போது சந்தனமரத்தில் தெரிந்த பகவானின் திருக்கோலத்தை மாற்றி அமைத்து சித்திர ரத வல்லபப் பெருமாள் என்று பெயர் சூட்டப்பட்டது.

வெகுநாளாக திருமணம் ஆகாமல் இருப்பவர்களுக்குத் திருமணம் கைகூடுகிறது. புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குப் புத்திர பிராப்தம் வாய்க்கிறது. வியாபார உயர்வு, உத்தியோக உயர்வு, கல்வி உயர்வு என்று சகல காரியமும் கிட்டுகிறது.

இது குருஸ்தலம் என்பதால் குருப்பெயர்ச்சி நாளன்று குருபகவானுக்கு இலட்சார்ச்சனை, திருமஞ்சனம் மற்றும் மகாயாகம் வெகுசிறப்பாக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது

லிங்கமும் கலப்பையும்

''லாங்குல'' என்றால் வடமொழியில் கலப்பை என்பது பொருள் ஆகும்.

''லாங்குல'' என்பதிலிருந்து லிங்கம் என்ற சொல் உதித்தது என்கின்றனர் சான்றோர்கள்.

பதில்

★ சத்தியநாராயணன், அயன்புரம்
கேள்வி : விநாயகருக்கு அறுகு சாற்றி வழிபடுவது ஏன்?

பதில் : வாசனைமலர்கள் ஏராளமாக இருந்தாலும், விநாயகர் வழிபாட்டில் அறுகம் புல்லுக்கே முதலிடம். இதற்கு விநாயகப் புராணம் தெரிவிக்கும் காரணம் இது தான்.

அனலாசுரன் என்ற அசுரன் மானிடருக்கும், தேவருக்கும் அநேக தொல்லைளைக் கொடுத்து வந்தான். அந்தத் தீயாக தகித்த தீயவனை விநாயகர் விழுங்கி விட்டார். அதனால் விநாயகர் வயிறு மட்டுமல்ல அனைத்து உயிர்களையும் அவ்வனல் வாட்டியது.

கணபதியின் வயிறு குளிருமாறு முனிவர்கள் இருபத்தியொரு அறுகம்புல்லை எடுத்து விநாயகரின் திருமேனி மீது சாற்றினார்கள். கணபதியின் வயிறும் குளிர்ந்தது. அனைவர் வயிறும் குளிர்ந்தது. அறுகே நமக்கு உகப்பு என்றார் ஆனைமுகன். அதுமுதல் விநாயகருக்கு அறுகு சாற்றி வழிபடும் வழக்கம் உண்டானது.

★ சம்பத்குமார், மயிலாடுதுறை
கேள்வி : ''அரசமரத்துப் பிள்ளையாரைச் சுற்றினால் மணிவயிறு வாய்க்கும்'' என்கிறார்களே! இதனை விளக்கிக் கூறுங்கள்?

பதில் : அரசமரம் கணவன் என்பதும், வேப்ப மரம் மனைவி என்பதும் நம் இந்துமதம் உணர்த்தும் ஒரு நம்பிக்கையாகும்.

அரசமரமும், வேப்பமரமும் இணைந்துள்ள இடத்தில் பெரும்பாலும் விநாயகர் கோயில் கொண்டு விளங்குவதைக் காணலாம்.

கொடிய நச்சு வியாதிகளைக் கொல்லும் ஆற்றல் வேம்பிற்கு உண்டு. பூமியின் காந்த சக்தியை அதிகம் பெற்ற மரம் அரசு. இந்த இரண்டு மரமும் இணையும் போது அதிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சு பெண்களின் கருப்பை நோய்களைத் தீர்க்க வல்லதாகும்.

ஆகவேதான் அரசமரத்தடி விநாயகரைச் சுற்றினால் மணிவயிறு வாய்க்கும் என்று நம் முன்னோர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

★ அம்பிகா, வடபழநி
கேள்வி : நாம் சாப்பிடுவதற்கு முன் நம் சாப்பாட்டிலிருந்து ஓர் உருண்டை காக்கைக்கு வைத்து அது சாப்பிட்ட பிறகே நாம் சாப்பிட வேண்டும் என்று கூறப்படுவது ஏன்?

பதில் : இறந்து போன நம் முன்னோர்கள் காக்கை வடிவில் வருவர் என்பதனால், நம் முன்னோர்களுக்கு உணவு படைத்தபிறகு நாம் உண்ணுதல் வேண்டும் என்பதற்கே இந்தப் பழக்கத்தை நமக்குப் பெரியவர்கள் கற்பித்துள்ளார்கள்.

மேலும் நமது உணவைப் பிறருடன் பங்கிட்டு நாம் உண்ணவேண்டும் என்ற தர்ம சிந்தனை யையும் இந்தப் பழக்கம் நமக்குக் கற்பிக்கின்றது. அவ்வாறின்றி நம் பகைவர்கள் நமக்குத் தெரியாமல் உணவில் விஷத்தைக் கலந்து வஞ்சனையால் நம்மைக் கொல்லவும் கூட முயலலாம். காக்கைக்கு அன்னமிட்டுப் பார்த்து அது உணவை உண்டபிறகு ஆரோக்கியமாக இருந்தால் அதைச் சாப்பிடு என்று எதிரிகளிடம் தற்காத்துக் கொள்வதற்காகவும் காக்கைக்கு உணவிட்டு உண்ணும் இப்பழக்கத்தை நமக்கு நம் பெரியவர்கள் போதித்துள்ளதாக அறிகிறோம்.

★ சகுந்தலா, திருவான்மியூர்.
கேள்வி : குங்குமம் நெற்றிக்கு இட்டுக் கொள்ளாமல் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று வலியுறுத்தப் படுவது ஏன்?

பதில் : ஒருவர் மற்றவரைப் பார்க்கும்போது முதலில் பார்க்கப்படுவது முகம்தான். அதிலும் குறிப்பாக நெற்றியும், இரு கண்களுக்கு இடைப்பட்ட பாகமும்தான் முதலில் தென்படும்.

பிறரை மயக்க, வசியப்படுத்த இப்பாகங்களே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

உடலுக்கு ஆடை மறைப்பு;எலும்புக்குத் தோல் மறைப்பு; நெற்றிக்கு மறைப்பாவது குங்குமம்.பெண்கள் பிறதீயவர்களின் பார்வையில் இருந்து தப்பித்துக் கொள்ளக் குங்குமம் மறைப்பாகப் பயன்படும். ஆகவே குங்குமம் அணிவது அவசியம் என வலியுறுத்தப்பட்டு உள்ளது.

★ சம்பத்குமார், மயிலாடுதுறை.
கேள்வி : நாம் படுக்கும் போது வடக்குத் திசையில் நம் தலை இருக்கும் வண்ணம் படுத்தல் கூடாது என்று கூறுகிறார்களே ! அது ஏன்?

பதில் : 'வடக்கில் தலை வைத்துப் படுத்தால் ஆகாது' என்பது பெரியவர்கள் கூற்றாகும்.

நாம் வாழும் பூமியின் காந்த சக்தி, வட துருவத்தை நோக்கி நிற்கிறது. நாம் வடதிசையில் தலை வைத்துப் படுக்கும் போது அதன் ஈர்ப்புச் சக்தியானது நம்முடைய தலையையும், மூளையையும் பாதிக்கும்.

இதன் காரணமாக சித்தசுவாதீனம் இழந்து பாதிப்புகள் உண்டாகும் என்பதால், வடக்குத் திசையில் தலை வைத்துப் படுக்கக்கூடாது என்று பெரியவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

தெரிந்த கோயில் - தெரியாத செய்தி

கோனேரி ராஜபுரம் நடராஜர்

கலைமாமணி மா. லட்சுமணன்

ஊருக்குள்ளே ஒரு கோயிலிருக்கும்.
கோயிலுக்குள்ளே ஒரு சிலையிருக்கும்.
சிலையின் மார்பிலே ஒரு மருவிருக்கும்.
மருவிலே ஒரு முடியிருக்கும்.
அந்த ஊரின் பெயர் கோனேரி ராஜபுரம்.



தஞ்சைமண்ணைப் பொன் விளையும் பூமியாக்கிய பெருமை காவிரிக்கு உண்டு.

''சோழ வளநாடு சோறுடைத்து'' என்று சொல்லும் அளவுக்கு காவிரி எனவும், பொன்னி எனவும் பேர் படைத்தாள். ஆன்மீகச் சிறப்புக்கும் காவிரியே துணையாக நின்றாள். காவிரியை விலக்கி விட்டு எழுதவும் முடியாது. பேசவும் முடியாது.

கர்நாடகத்தில், குடகில் தலைக்காவிரியாகத் தோன்றி ஒஹேனக்கல் என்ற வனப் பிரதேசத்தில் ஆடுதாண்டல் காவிரியாக ஓடி, திருவரங்கத்தில் அகண்ட காவிரியாக மாறுகிறவளும் காவிரியே...

திருச்சி - தஞ்சைமாவட்டங்கள் முழுவதிலும் பாய்ந்து பூம்புகார் வரை ஓடி முடித்து வங்காள விரிகுடாவில் கலப்பவள் காவிரி. இங்கே அனைத்து ஆலயங்களிலும் அபிஷேகத்துக்குப் பயன்படுவளும் அவளே.

திருச்சிராப்பள்ளி திருவானைக்காவிலே யானைகள் சூழ்ந்த காடுகளின் வழியாக ஓடிக் களித்தவள் காவிரி.

சோழ மன்னன் ஒருவன் காவிரியில் குளித்த போது அவன் அணிந்திருந்த முத்து மாலை நதியிலே விழுந்து விட்டது. தண்ணீர் பிரவாகமாக ஓடியதால் முத்து மாலையைத் தேடி எடுப்பது என்பது இயலாத காரியமாக இருந்தது. சிறந்த சிவபக்தன் இவன். எனவே சிவார்ப்பணம் என்று கூறிச் சிவனுக்குப் போய் சேரட்டும் என்று அமைதியாக இருந்து விட்டான்.

பின்னர் ஆலயத்துக்கு வந்து பூஜையில் கலந்து கொண்டான். கோயில் குருக்கள் குடத்திலிருந்த காவிரி நீரை சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்தார். கானகத்தில் காவிரியில் விழுந்த அந்த முத்துமாலை குடத்திலிருந்த நீரில் இருந்து சிவலிங்கத்தின் மீது விழுந்தது. மன்னன் இக்காட்சியைக் கண்டு சிவார்ப்பணம் என்று தான் கூறிய சொல்லை சிவபெருமான் ஏற்றுக் கொண்டாரே எனப் பேரானந்தம் அடைந்தான். இந்தத் திருவானைக்கா ஆலயத்தில் புதியதொரு கோபுரமும் எழுப்பினான்.

ஆரம் நழுவியதின் நினைவாக இந்த கோபுரத்துக்கு ''ஆரம் விட்டான் கோபுரம்'' எனப் பெயர் வைத்தான். இன்றும் இந்தப் பெயருடன் அக்கோபுரம் விளங்குகிறது. அந்த நாளில் உயிரோட்டமாக இந்த தஞ்சைமண்ணில் மிகப் பூரிப்புடன் விளங்கினாள் காவிரி.

பல ஆண்டுகளுக்கு முன்னே கோவில் நகரம் எனக் கூறப்படும் கும்பகோணம் வட்டத்தில் பல கோயில்களுக்குச் சென்று இறைவனை தரிசித்து வரும் வேளையில் திருநாகேஸ்வரத்தினையும் கண்டேன். இங்கே பகவானுக்கு இராகுகால பூஜை மிக விசேஷம். நவக்கிரஹத் தலங்களில் திருநாகேஸ்வரமும் ஒன்று. இங்குச் சென்று தரிசித்துவிட்டு வரும் வேளையில் ''கோனேரி ராஜபுரம்'' என்ற ஊரில் சாலை பிரியும் இடத்திலே உள்ள பெயர்ப்பலகை என் கவனத்தைக் கவர்ந்தது.

அப்பலகையில் **''உலகிலேயே மிகப்பெரிய நடராஜர் சிலை உள்ள ஊர் இது''** என எழுதப் பெற்றிருந்தது.

தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் ஊருக்குள் சென்று ஆலயத்தில் அச்சிலையைக் கண்டேன். உண்மையிலேயே இது பெரிய சிலைதான். கோவில் மிகவும் பழமையானது என்பதைத் தோற்றத்தில் அறிந்தேன்.

கோயில் குருக்களிடம் அந்தக் கோயில் பற்றிய வரலாறுகளைக் கேட்டேன். போகும் இடங்களில் விசாரித்து அறிவது எனக்கு வழக்கம்.

''சிலையை முழுக்கப் பார்த்தீர்களா?'' என்று குருக்கள் கேட்டார்.

''பார்த்தேனே! மிகவும் அழகான சிலை''. ஓவியமாகட்டும், சிலைகளாகட்டும் கன பரிமாணம் என்ற கணக்கில் அடங்கும்.

மகிமைமிக்க திருத்தலம்

அரக்கோணம் வட்டம் நெமிலியில் அண்மையில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வீரபத்திரசுவாமி திருக்கோயில் மகிமைமிக்க திருத்தலமாகும்.

காரிய வெற்றி, சத்துரு வெற்றி வேண்டுவோர் இங்குள்ள ஸ்ரீ வீரபத்திரசுவாமியை வழிபட்டுப் பயன்பெறலாம்.

கைகால், மார்பு, தலை எல்லாம் அளவை மிஞ்சாமல் அமைந்திருப்பதுதான் அந்தக் கன பரிமாண இலட்சணம். அந்தச் சிறப்பினை இந்தச் சிலையும் பெற்றிருக்கிறது என்றேன்.

''சிலையின் மார்பிலே பாருங்கள்'' என்றார்.

உற்றுப் பார்த்தேன்! எத்தகைய விந்தை!

மார்பிலே ஒரு மரு இருந்தது. இது மனிதர்கள் உடலில் இருப்பது போல இருந்தது. அந்த மருவிலே ஒரு முடியும் இருந்தது.

''என்ன இது அதிசயமாக இருக்கிறதே. பஞ்சலோகத்தாலான சிலையில் மருவா? அதில் முடியா?'' என்றேன்.

''ஆமாம். இதுபற்றி ஒரு கதையே உண்டு'' என்றார் குருக்கள்.

காவிரிக்கரையிலே வாழ்ந்த சோழ மன்னன் ஒருவனின் கனவிலே இறைவன் தோன்றினார். ஆடும் தெய்வமான நடராஜா சிலையைக் கோனேரி ராஜபுரம் என்ற ஊரில் ஆலயத்தில் அமைக்க வேண்டும் எனக் கூறினாராம்.

கை தேர்ந்த சிற்பி ஒருவரை அழைத்து வரச் செய்து அவரிடம் தனது கனவினைப் பற்றிக் கூறி ''தொண்ணூறு நாள் தவணையில் சிலையை உருவாக்கித் தரவேண்டும். அந்தச்சிலை மிக பெரிய அளவிலே இருக்க வேண்டும். உலகோர் பாராட்டும் வகையிலே அமைந்திருக்க வேண்டும். பஞ்சலோகத்தால் உருவாக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். கோவில் கட்டும் பணியைத் தொடங்கி விட்டேன். தெய்வத் திருப்பணி. இதற்குச் சன்மானமாக நிலமும் வீடும் பொற்காசுகளும் தரப்படும்'' எனக் கூறினான்.

சிற்பியும் அவ்வாறே அவன் ஆசையைப் பூர்த்தி செய்யும் பணியில் இறங்கினார்.

இது சோதனையாக அமையும் என்பது அவருக்குத் தெரியாது. பஞ்சலோகத்தை உருக்கி அச்சிலே வார்த்தால் அது ஏனோ பின்ன முடையதாகவே ஏதேனும் ஓரிடம் விளங்கியது. மீண்டும் மீண்டும் முயன்றாலும் குறை எதனால் வருகிறது என்பதைக் கண்டறிய முடியவில்லை. எத்தனையோ சிலைகள் வடித்த அனுபவம் உள்ளவர். இது மட்டும் ஏன் இப்படி?

மன்னன் வைத்த கெடு முடிவடையும் தருவாய்க்கு வந்து விட்டது. சிலையைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் சிற்பியின் வீட்டுக்கு மன்னனே வந்து விட்டான். சிலை உருவாக வில்லை என்ற செய்தி அவனுக்கு ஆத்திரத்தையும் அதிர்ச்சியையும் விளைவித்தது.

''இருப்பது இரண்டு நாள். சிலை செய்யப்பட வில்லை என்றால் உமது தலை போய்விடும்'' என்று சினத்தோடு கூறிவிட்டுப் போய் விட்டான். தலை போவது உறுதி. இந்தச் சிந்தனையில் கன்னத்தில் கையூன்றிக் கவலையோடு உட்கார்ந்து இருந்தான். அவர் அருகே பெரிய பாத்திரம் ஒன்றில் பஞ்சலோகம் கொதித்துக் கொண்டு இருந்தது. ''இறைவா, இது என்ன சோதனை'' என வாய்விட்டு அலறினான் சிற்பி.

''அய்யா ! அய்யா !'' என யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தார். ஒரு வயோதிகர் சிவப்பழமாக வந்து நின்றார்.

தாகம் .... தாகம்... தண்ணீர்!

''தண்ணீர் கொடுப்பது தர்மம்'' என்றார்.

''தலையே போகப்போகிறது. இதிலே தர்மம் என்ன... உள்ளே போய் எடுத்துக் குடியுங்கள்'' என்றான் சிற்பி.

உள்ளே சென்ற பெரியவர் அடுப்பிலிருந்த பஞ்சலோக திரவத்தை மடமடவெனக் குடித்து நடராஜர் வடிவத்தில் சிலையாக நின்றார். அவரது மார்பில் ஒரு மருவிருந்தது. அந்த மருதான் சிலையிலும் வந்து விட்டது. சிற்பி ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தார். இந்த அதிசயம் உலகில் வேறெங்குமில்லை என்றார் குருக்கள்.

சிலையின் பாதத்தைத் தொட்டு வணங்கி கண்களில் ஒற்றிக் கொண்டேன். கண்ணுள்ள வரெல்லாம் காண வேண்டிய காட்சி நடராஜரின் திருக்கோலம். ஊர் - கோனேரி ராஜபுரம்.

திருவானைக்காவல் அருள்மிகு வீரபத்திரசுவாமி ஆலயம்

- வாசுகி கண்ணப்பன்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக் காவலில், அருள்மிகு ஜம்புகேஷ்வரர், அகிலாண்டேஸ்வரி புராதன ஆலயம் உள்ளது. இவ்வாலயத்தின் பழமை சுமார் 2500 ஆண்டுகள் எனச் சரித்திரம் கூறுகிறது. இந்தக் கோயிலின் மேற்கே மேலவிபூதி பிரகாரத்தில் தனியே அருள்மிகு வீரபத்திரசுவாமிகோயில் உள்ளது. இதுவும் 2500 ஆண்டுகள் புராதன மானதாகும். அருள்மிகு ஜம்புகேஷ்வரர் ஆலயத்துடன் இணைந்தது.

இந்தக் கோயிலின் சன்னிதானத்தின் மூல விக்கிரமான வீரபத்திரர் ஆறடி உயரமானவர். சாந்தமுகம் கொண்டவர். நான்கு கைகளைக் கொண்டவர். இந்தக் கைகளில், அதர்மத்தை அழிப்பதற்காக கத்தி, வில், அம்பு கொண்டுள்ளார். இடது கை ஊன்றியவண்ணம் உள்ளது. தலையிலே உள்ள கிரீடத்தில் லிங்கம் கொண்டவர். முழுமையாகக் காணும் போது நின்ற கோலத்தில் சாந்த சொரூபராகக் காட்சிதருகிறார்.

ஸ்தபதி விற்பன்னர்கள் மூல விக்கிரகத்தின் தோற்றத்தைக் கண்டு வியந்தனர். அவரின் கம்பீரத் தோற்றம் மனதிற்குத் தெம்பையும், தன்னம்பிக்கையையும், ஆனந்தத்தையும் கொடுக்கும் வகையில் மிகக் கம்பிரமான சிலையாகும்.

இந்தக் கோயிலுக்கு 1939, 1957, 1968, 1980 ஆம் ஆண்டுகளில் மிகச்சிறப்பாக திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றுள்ளது. இக்கோயில் மிகவும் பழமையானதென்பதனால் அதன் சுற்றுச் சுவர்கள் வலுவிழந்த சூழ்நிலையில் இருந்தன. மேல் கர்ப்பகிரகக் கோபுரம் சுமார் நான்கு அடி உயரமாக இருந்தது. இக்கோயிலின் தொன்மை குறையா வண்ணம் கர்ப்பகிரக மூலவர் மற்றும் நந்தி தவிர எல்லாப் பகுதிகளையும் விரிவாக்கிப் புதுப்பிக்கப்பட்டு ஆகஸ்டு 2004ஆம் ஆண்டு திருக்குட நன்னீராட்டு விழா வெகுச் சிறப்பாக நடைபெற்றது. இந்தப் புனரமைப்பில் 4.5 அடி உயரமுள்ள மூலவர் கோபுரம் புதிதாக 16 அடி உயரத்திற்குப் புதிய கலசத்துடன் பொலிவாகக் கட்டப்பட்டுள்ளது.

அவ்வமயம், அருள்மிகு விநாயகர், அருள்மிகு முருகன், அருள்மிகு லிங்கோத்பவர், அருள்மிகு தட்சிணாமூர்த்தி, அருள்மிகு துர்க்கையம்மன் சிலைகள் சுற்றுச் சுவரில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இக்கோயிலின் மேல விபூதி பிரகாரத்திற்கு ஒரு புனிதத் தன்மை உண்டு. தென்னாடுடைய சிவன், தாம் சாதாரண மனித வடிவத்தில் இந்த வீதியில் உலாவரும்போது அடியார்களுக்கு விபூதி பிரசாதம் அளிப்பாராம். இந்த அடியார்களின் தொண்டின் புனிதத் தன்மையைப் பொருத்து, இந்த விபூதிப் பிரசாதம் பொற்காசுகளாக மாறும் வகையில் பக்தர்களுக்கு அருள்மிகு சிவன் அருள் பாலிப்பாராம். சிவன் உலாவிய பிரகாரத்தில்தான் அருள்மிகு வீரபத்திரசுவாமி கோயில் உள்ளது.

மேலும், எல்லா புராதன சிவன் கோயில் களிலும், வெளிப் பிரகாரத்தில் தனியே அருள்மிகு வீரபத்திரசுவாமி கோயில் இருப்பதை நாம் காணலாம்.

திருக்குட நன்னீராட்டு விழாவிற்கு முன் 4 1/2 அடி உயரமுள்ள கோபுரத்தின் தோற்றம்

16 அடி உயரம் கோபுரம் எழுப்பி 2004 ஆகஸ்ட் 22ம் தேதி செய்விக்கப்பட்ட திருக்குட நன்னீராட்டு விழாவில் எடுக்கப்பட்ட கோபுரத்தின் தோற்றம்

திருவிளையாடல் புராணம்

இரா.அரங்கசாமி

கால் மாறி ஆடிய படலம்

விக்கிரம பாண்டியன் மூப்படைந்ததும் தன் புதல்வரான இராசசேகரனிடம் ஆட்சியை ஒப்படைத்துச் சிவபதம் அடைந்தான். பின்னர் இராசசேகரன், சிவபெருமான் ஆனந்த வடிவாய் வெள்ளியம்பலத்தில் புரிந்தருளிய நடனத்தின் மேல் வைத்த பேரன்பின் காரணத்தால் பரதநாட்டியம் என்ற கலையைத் தவிர மற்ற அறுபத்து மூன்று கலைகளையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தான்.

அவன் மதுரையில் சிறப்பாகச் செங்கோல் செலுத்தி வந்தபோது சோழநாட்டைக் கரிகால் பெருவளத்தான் அரசாண்டு வந்தான். அவன் அறுபத்து நான்கு கலைகளையும் நன்கு கற்று அறிவிற் சிறந்து விளங்கி வந்தான்.

கரிகாற் சோழனது அவைப்புலவன் ஒருவன் பாண்டிய நாட்டிற்கு வந்தான். வேப்பமாலை அணிந்த பாண்டியன் இராசசேகரனைச் சந்தித்து ''பாண்டிய மன்னனே ! எமது மன்னர் கரிகாற் பெருவளத்தானுக்கு அறுபத்துநான்கு கலைகளும் தெரியும். உமக்கு அவற்றில் பரதக்கலை ஒன்று மட்டும் தெரியாது, ஆகையால் நீவிர் அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தவரல்லவே'' என்றான்.

அதைக் கேட்ட இராசசேகரன் வெகுண்டு ''சிவபெருமான் ஆடுகின்ற அந்தத் திருநடனத்தை நானும் ஆடுவதற்கு என் மனம் இடம் தரவில்லை. உன் ஏளனச் சொற்களால் நான் அதையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது பெருமானின் திருவுள்ளம் போலும்'' என்று நினைத்தான்.



பிறகு இராசசேகரன் பரதநாட்டியக் கலையைக் கற்றறிந்து கொள்வதற்காகவும், அந்நாளில் வழி முறைப்படி ஆடவும் பழகிக் கொள்ள, அந்தக் கலையில் தேர்ச்சி பெற்ற புலவரைத் தேடினான். அவருக்கு ஆடை, அணிகலன், பொன் முதலியவற்றைக் கொடுத்துப் பரதக்கலையை நன்கு கற்றுத் தேர்ந்தான்.

இராசசேகரன் பரதநாட்டியம் பயிலத் தொடங்கினான். அப்போது உடலில் களைப்பு உண்டாவதை அறிந்தான். வெள்ளியம்பலத்தில் இடைவிடாமல் ஆடுகின்ற சிவபெருமானுக்கும் அத்தகைய அயர்வு ஏற்படத்தானே செய்யும் ? பிரம்மாவினாலும், விஷ்ணுவினாலும் காணப் பெற முடியாத திருவடிகளில் ஒன்று மட்டும் பல நாட்களாகத் தொடர்ந்து ஆடிக் கொண்டிருக்கிறதே ! அதனை அறிந்த நான் உயிருடன் இருந்தும் அந்நிலையைப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா? சிவபெருமான் செய்கின்ற திருக்கூத்தை நான் எவ்வாறு தடுக்க முடியும் ? தடுக்காவிட்டாலும் அவரது திருவடி வருந்துமே ! என்று பலவாறு சிந்தித்து இரவு பகலாகத் துன்பத்தில் உழன்று வந்தான்.

''இதற்கு இவ்விதம் செய்தலே சிறப்பு'' என்று ஒரு நாள் ஒரு முடிவுக்கு வந்தான். அதன்படி சிவராத்திரி தினத்தன்று இறைவனின் திருக்கோயிலை அடைந்தான். நான்கு யாமமும் சோமசுந்தரக் கடவுளுக்கு, சிறப்புப் பூசைகளை சிவாகம முறைப்படி செய்வித்தான்.

வெள்ளியம்பலத்தில் பேரொளியாக விளங்கும் பரம்பொருளின் திவ்விய திருநடனத்தைத் தரிசித்து வணங்கி. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகி, தன் இருகைகளையும் தன் தலைமீது தூக்கி. ''பெருமானே ! ஊன்றிய திருவடியை மேலே எடுத்து வீசி, தூக்கிய திருவடியை நிலத்தின் மீது ஊன்றி இன்று அடியேன் காணுமாறு கால் மாறி ஆட வேண்டுகிறேன். அவ்வாறு செய்தால் எளியேன் தங்களைப் பற்றிக் கொண்டுள்ள வருத்தம் நீங்கும். தாங்கள் அவ்வாறு செய்யாவிட்டால் துன்பம் தாங்காமல் இறந்து விடுவேன்'' என்று விண்ணப்பித்தான்.

சிவபெருமானின் எதிரில் தனது உடைவாளைப் பூமியின் மீது நாட்டி அதன் மீது குப்புற வீழ்வதற்குத் தயாரானான். அதைக் கண்ட அன்பருக்கு எளியரான சிவபெருமான்

தமது இடது காலைத் தரையில் ஊன்றி, வலது காலை எடுத்து வீசி, கால் மாறி ஆடலானார்.

அந்த அதியற்புத நடனத்தைக் கண்ட பாண்டியன் பெருமகிழ்ச்சியடைந்து, ''வெள்ளி யம்பலத்து நடனமாடுகின்ற ஆடற்பெருமானே! இந்தக் கால் மாறி ஆடிய திருக்கூத்தை யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இவ்வாறே நின்று திருவருள் செய்ய வேண்டும். இதுவே அடியேன் உம்மிடம் விண்ணப்பிக்கும் வரமாகும்'' எனக் கூறினான்.

அன்று முதல் இன்று வரை, சோமசுந்தரக் கடவுள் கால் மாறி ஆடிய திருக்கோலத்தவராகவே நின்று அருள் கனிவுடன் உலகங்களை எல்லாம் தனது ஆனந்தத் திருநடனத்தாலேயே இயக்கி இன்னருள் புரிந்து வருகிறார்.

(தொடரும்)

ஆய கலைகள் 64

1. அட்சர இலக்கணம் (எழுத்தியல்பு)
2. லிகிதம் (எழுதும் ஞானம்)
3. கணிதம் (எண்ணூல்)
4. வேதம் (முதல் நூல்)
5. இதிகாசம் புராணம் (பூர்வ கதை)
6. வியாகரணம் (இலக்கணம்)
7. சோதிட சாஸ்திரம் (வானநூல்)
8. தரும சாஸ்திரம் (அறநூல்)
9. நீதி சாஸ்திரம் (நீதி நூல்)
10. யோக சாஸ்திரம் (யோக நூல்)
11. மந்திர சாஸ்திரம் (மந்திர நூல்)
12. சகுன சாஸ்திரம் (நிமித்த நூல்)
13. சிற்ப சாஸ்திரம் (மனையடி நூல்)
14. வைத்திய சாஸ்திரம் (மருத்துவ நூல்)
15. உருவ சாஸ்திரம் (உடல் லட்சணம்)
16. சப்தப் பிரம்மம் (ஒலிக்குறி நூல்)
17. காவியம்
18. அலங்காரம் (அணி இலக்கணம்)
19. மதுரபாஷாணம் (சொல்வண்ணம்)
20. நாடகம் (கூத்து)
21. நிருத்தம் (நடன நூல்)
22. வீணை
23. வேணு (புல்லாங்குழல்)
24. மிருதங்கம்
25. தாளம்
26. அஸ்திர பரீட்சை
27. கனக பரீட்சை(பொன்மாற்று)
28. இரத பரீட்சை(இரதம் ஓட்டல்)
29. கஜ பரீட்சை(யானை செலுத்தல்)
30. அஸ்வ பரீட்சை(குதிரை ஏற்றம்)
31. ரத்தின பரீட்சை
32. பூமி பரீட்சை
33. சங்கிராம இலக்கணம் (யுத்தமுறை அறிதல்)
34. மல்யுத்தம்
35. ஆகர்ஷணம் (அழைத்தல்)
36. உச்சாடனம் (அகற்றல்)
37. வித்வேஷணம் (பகை மூட்டல்)
38. மதன சாஸ்திரம் (கொக்கோகம்)
39. மோகனம் (மயக்குதல்)
40. வசீகரணம் (வசியம்)
41. இரசவாதம் (தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கல்)
42. காந்தர்வ வேதம் (கந்தர்வர்களைப் பற்றிய ரகசியங்கள்)
43. பைபீல வாதம் (விலங்கு மொழியறிவு)
44. கவுத்து வாதம் (துக்கத்தை இன்பமாக மாற்றல்)
45. தாது வாதம் (நாடி நூல்)
46. காருடம் (மந்திரத்தால் விஷம் அகற்றல்)
47. நஷ்டப்பிரச்சனம் (சோதிடத்தில் இழப்பு கூறல்)
48. முட்டி (சோதிடத்தில் மறைந்தன கூறல்)
49. ஆகாயப் பிரவேசம்
50. ஆகாய கமனம் (வானில் மறைந்து உலாவுதல்)
51. பரகாயப் பிரவேசம் (கூடு பாய்தல்)
52. அதிருசியம் (தன்னை மறைத்தல்)
53. இந்திர ஜாலம் (ஜால வித்தை)
54. மகேந்திர ஜாலம் (அதிசயம் காட்டல்)
55. அக்கினி ஸ்தம்பம் (நெருப்பைக் காட்டல்)
56. ஜலஸ்தம்பம் (நீர்மேல் நடத்தல்)
57. வாயுஸ்தம்பம் (காற்று பிடித்தல்)
58. திருஷ்டிஸ்தம்பம் (கண் கட்டல்)
59. வாக்கு ஸ்தம்பம் (வாயைக் கட்டல்)
60. சுக்கிலஸ்தம்பம் (இந்திரியங்கட்டல்)
61. கன்னஸ்தம்பம்
62. கடக ஸ்தம்பம்
63. அவஸ்தைப் பிரயோகம்
64. கீதம்.

காலச்சுவடுகள்

கவர்னர் கோலெட்துரை கட்டிய வரதராஜர் ஆலயம்

ஆங்கில கவர்னராகத் திகழ்ந்தவர் கோலெட்துரை. இவருடைய உதவியாளரான வீரராகவன் என்பவர் பரம வைணவ பக்தர்.

நினைத்தபோதெல்லாம் காஞ்சிவரதரைச் சேவிக்கச் சென்று விடுவார்.

பூந்தமல்லிவரை இரு குதிரைகள் பூட்டிய கோச்சுவண்டியில் சென்று, அங்கு வேறு இரு குதிரைகள் பூட்டி ஸ்ரீபெரும்புதூர் செல்வார். பிறகு அங்கு இரு புதிய குதிரைகளைப் பூட்டி காஞ்சிபுரம் செல்வார்.

காஞ்சியிலிருந்து சென்னை திரும்பும்போதும் இதே முறையில் பயணம் செய்வது இவர் தம் வழக்கம் ஆகும்.

ஒரு நாள் கவர்னருக்கு அவசரமாக சில விவரங்கள் தேவைப்பட்டன. ஆனால் உதவியாளரோ காஞ்சிக்குச் சென்றிருப்பதாகத் தகவல் தரப்பட்டது.

கவர்னர் கோலெட்துரைக்கு வந்தது மகா கோபம். வீரராகவன் திரும்பியதும், ''என்னய்யா! அவ்வளவு மகத்துவம் வாய்ந்த பெருமாள் உங்கள் பெருமாள்! இப்பொழுது அவர் என்ன செய்து கொண்டிருப்பார் ?'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

பக்தருக்குத் தர்மசங்கடமான நிலை. ''அப்பனே வரதா ! இது உனக்குத்தான் பரீட்சை. எல்லாம் உன் சித்தப்படி ஆகட்டும்'' என்று ஒரு நிமிட நேரம் கண்களை மூடிக் கொண்டு விட்டார்.

அன்று காஞ்சியில் திருத்தேர் உற்சவம். தேர் பகல் ஒரு மணிக்குக் கங்கணா மண்டப மூலை திரும்புகிறது. கூட்டமோ ஏகப்பட்ட கூட்டம்.

அக்கூட்டத்தில் ஒரு குழந்தை தன் தாயின் இடுப்பிலிருந்து நழுவிக் கீழே விழுந்துவிட்டது.

பிரம்மாண்டமான தேர்ச் சகடைகள் கழன்று வருகின்றன.

அடுத்த விநாடி, அக்குழந்தையின் மீது தேர்ச் சக்கரங்கள் ஏறிவிடக்கூடும்.

''ஐயோ குழந்தை !'' என்று ஒரே அலறல்.

நல்ல வேளையாக அக்கூட்டத்திலிருந்து ஒரு அன்பர் பாய்ந்து அக்குழந்தையைத் தூக்கிக் காப்பாற்றி விட்டார்.

இந்தக் காட்சி நிழல் போல் வீரராகவனார் உள் திருஷ்டியில் தெரிய அப்படியே '' இந்த நேரம் காஞ்சியில் பெருமாள் செய்தது இதுதான்!'' என்று ஒப்புவித்து விடுகிறார்துரையிடம்.

கோலெட்துரை, வீரராகவனார் கூறியதை எளிதில் ஒப்புக் கொண்டுவிடவில்லை.

''இது உண்மையா ?'' என்று கண்டறிய பலரையும் காஞ்சிக்கு அனுப்புகிறார். அவர்களும் விசாரித்து வந்து, ''ஆம் ! நடந்ததெல்லாம் உண்மை தான்'' என்று கவர்னருக்குத் தெளிவுபடுத்தி விட்டனர்.

கவர்னர் கோலெட் துரை அவர்களுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

தான் வசித்திருந்த பேட்டையில், ஒரு வரதராஜர் ஆலயம் நிறுவி அப்பழுக்கற்ற பக்தர் வீரராகவனாரையே முதல் அறங்காவலராக நியமித்து விட்டார் கவர்னர் கோலெட் துரை.

அருள்மிகு வரதராஜர் ஆலயம் அமைத்த கவர்னரின் பெயரிலேயே அப்பகுதி ''கோலெட் பேட்'' ஆகி நாளடைவில் ''காலாடிப் பேட்டை'' யாக மாறி அமைந்து விட்டது.



மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

17

துரியோதனனையும், அவனுடைய தம்பி மார்களையும், சகுனியையும், கர்ணனையும், வெல்லவும், கொல்லவும் அர்ச்சுனனுக்குத் தயக்கமும் இல்லை. மயக்கமும் இல்லை. இதை அஞ்ஞாத வாசத்தின் இறுதியில் துரியோதனனால் கவரப்பட்ட விராட மன்னனின் ஆநிரைகளை பிருகந்நளை என்ற பேடி வடிவத்தில் மீட்க வந்து, தன்சுய வடிவில் வெளிப்பட்டு, துரோணர் வீடுமர் முதலான தம் மரியாதைக்குரிய பெரியோர்களிடம் போரிட நேர்ந்த சந்தர்ப்பத்திலேயே அர்ச்சுனன் கூறுவதைக் காணுகின்றோம்.

''யாதுமொன் றறியாவென்னை இவனலா திலை என்றிந்த

மேதினி மதிக்குமாறு இன்முதற் படைகள்யாவும்

தீதறத் தந்த வுண்மைத் தெய்வநீஎன்றால்பஞ்ச பாதகந் தன்னிலொன்றுன் பதயுக பிழைப் பதையா'

- நிரை மீட்சிச்சருக்கம் : 88



இது அர்ச்சுனன், துரோணரை நோக்கி கூறிய பணிவு மொழியாகும். துரோணராலேயே வில்லுக்கு விசயன் என்று உலகம் புகழ்ந்து உரைக்குமாறு தான் ஆற்றல் பெற்றதை அன்புடன் எடுத்துக் காட்டிய அர்ச்சுனன், துரோணரை உண்மைத் தெய்வம் என்று போற்றி, அவருடன் போர் செய்வதும், அவருக்குத் தீங்கு இழைப்பதும் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகி விடும் என்ற தன் அச்சத்தைத் தெரிவிக்கிறான். மேலும் துரியோதனன் அல்லாத துரோணர், கிருபர், அசுவத்தாமன், வீடுமர் ஆகியோருடன் போர் புரிவது நிச்சயம் பாவமே ஆகும் என்ற தன் பயத்தையும் அர்ச்சுனன்,

''மன்னொடு சூழநின்ற மாசுணம் உயர்த்த கோவை

மின்னொடும் உருமேறென்ன வெகுண்டமர் புரிவதல்லால்

நின்னொடுங் கிருபனோடும் நின் மகனோடும் முந்தை

தன்னொடும் புரியேன் வெம்போர்; தக்கதோ சரதம் பாவம்''

- நிரை மீட்சிச் சருக்கம் : 89

என எடுத்துரைப்பதையும், அதற்குத் துரோணர் ''நாங்கள் செஞ்சோற்றுக்கடன் கழிப்பதற்காக துரியோதனனுக்காகப் போர்புரிய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். ஆகவே நீஙகளை எதிர்த்துப் போர் செய்தே ஆக வேண்டும்'' என வற்புறுத்துவதையும், அதற்குப் பிறகு மனம் தெளிவு பெற்று அர்ச்சுனன் போர் செய்து துரோணர், வீடுமர், அசுவத்தாமா, கிருபர், கர்ணன் முதலான அனைவரையும் வென்று, துரியோதனன் மகுடத்தையும், தன் அம்பினால் சிதைத்து, மகுடபங்கப்படுத்தி ஆநிரைகளை மீட்டு வெற்றி கொள்வதையும், விராட பருவத்தில் மிக விரிவாகக் காணுகின்றோம்.

அப்பொழுதிலிருந்தே அர்ச்சுனன் மனத்தை வாட்டிக் கொண்டிருக்கும் மிகப் பெரிய கவலை, ஆசிரியரை எதிர்த்தும், தாத்தாவை எதிர்த்தும், தனக்கு எந்த வகையிலும் தீமை செய்யாத வணக்கத்திற்கும், மரியாதைக்குமுரிய பெரியவர்களை எதிர்த்தும், போர் செய்வதும்,

விநாயகரின் வாகனங்கள்

பொதுவாக விநாயகருக்கு உரிய வாகனம் மூஞ்சூறு அல்லது பெருச்சாளி ஆகும்.

விநாயருக்குரிய பிற வாகனங்கள் :

திருத்தலம்	வாகனம்
திருவானைக்கா	மயில்
பாண்டிச்சேரி	மயில்
சுசீந்திரம்	காளை
திருநெல்வேலி	காளை
திருச்செந்தூர்- ஆவுடையார் குளக்கரை -அரசாள்வார் விநாயகர்	யானை
வில்லிபுத்தூர் - வைத்தியநாத சாமி கோயில் - கல்யாண விநாயகர்	யானை
திருவொற்றியூர்	சிங்கம்
விரிஞ்சிபுரம்	சிங்கம்
கடலூர் - சென்னப்பநாயக்கன் பாளையம் -மலையாண்டவர் விநாயகர்	குதிரை
திருப்பரங்குன்றம் - பழைய சொக்கநாதர் கோயில் விநாயகர்	பூதம்.



அவர்கள் உயிரை வதைப்பதும் கொடிய பாவமே ஆகும் அல்லவா என்ற சிந்தனையேயாகும். பாவம் செய்தவன் துரியோதனனும் அவனுடைய தம்பிமார்களும். அவர்களைக் கொல்வது நியாயமே.

ஆனால் அவர்களுக்காகத் திரண்டு நிற்கும் 11 அக்குரோணி சேனைகளையும் கொல்வது எப்படி நியாயமாகும் என்றே மயங்குகிறது அவன் நெஞ்சம். அர்ச்சுனனின் அந்த மயக்கமே போர் தொடங்கப் போகும் அந்த இறுதி நேரத்தில் அவனைத் தடுமாற வைக்கிறதுஃ காண்டீபத்தைக் கையிலே பிடிக்காமல் களத்திடை விழச் செய்கிறது.

இவ்வாறு அர்ச்சுனன் மனம் தடுமாறிப் போர் புரிய மாட்டேன் என்று மறுக்கும் நேரத்தில் கண்ண பரமாத்மா அர்ச்சுனன் மனம் தெளிய அவனுக்குப் பல உண்மைகளை உபதேசிக்கிறார். அவ்வாறு உபதேசிக்கும் உபதேசங்களே **பகவத் கீதை** எனப் பாருலகம் முழுவதும் போற்றப்படுகிறது.

''அர்ச்சுனா! தந்தை, தாய், மக்கள், தாரம், நண்பர், பகைவர் என்ற பலப்பல எண்ணங்கள் மாயையின் பாற்பட்டவை. மாயையை வென்று வாழ்வதே அறிஞர்கள் தம் கடமையாகும். ஆத்மாக்களுக்கு உடல்களை அளிக்கும் பரம் பொருள் வேறு யாருமில்லை. நானேதான், உடல்கள் அழியுமே தவிர ஆத்மாக்கள் (உயிர்கள்) அழிவதில்லை. மறுபடி பிறக்கக் கூடிய ஆத்மாக்கள் இழக்கக் கூடிய உடல்களுக்காக வருந்துவது வீண் செயலாகும். ஐம்பெரும் பூதங்களால் ஆகிய உடல்களை உயிர்களுக்கு வழங்கி அவ்வுயிர்கள் தோறும் பாலுக்குள் நெய்யைப்போல இருந்து செயல்படக் கூடிய பரம் பொருள் நானாக இருக்க, என் கட்டளையை ஏற்றுக் காரியம் ஆற்ற வேண்டுவதே உன் கடமையாகும்''.

''கடமையைச் செய். பலன்களைப் பாராதே. பரம் பொருளாகிய என்னுடன் நீயும் பிரிவொன்றின்றி இணைந்தே என்னுடைய அவதாரங்கள் தோறும் செயல்பட்டு வந்திருக்கிறாய். அப்படியிருக்க இப்பொழுது மட்டும் உன்னை மாயை மறைப்பது ஏன்?''

''ஒரு அவதாரத்தில் நான் நாராயணன், நீநரன், மற்றொரு அவதாரத்தில் நான் இராமன், நீஇலட்சுமணன், இப்பொழுது இந்த அவதாரத்தில் நான் கிருட்டிணன், நீஅர்ச்சுனன். உலகிலுள்ள உயிர்க்குலங்களின் நன்மைக்காகவே அவதாரங்களை எடுத்து நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த யுத்தம் நடப்பதும் கூட உயிர்க் குலங்களின் நன்மைக்காகவே. ஆகவே, உன் மயக்கம் ஒழித்து

விநாயகர் கைகளில் ஏந்திய பொருள்கள் :

திருத்தலம்	விநாயகர் ஏந்திய பொருள்
பிள்ளையார்ப்பட்டி	லிங்கம்
திருப்பரங்குன்றம்	கரும்புவில்
உடையார்பாளையம்	வில்
சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில்	வெண்ணெய்
சென்னை, மாங்காடு வெற்றி விநாயகர் கோயில்	மாம்பழம்
திருப்பாதிரிப்புலியூர்	பாதிரிப்பூக்கள்
சேலம், சுகவனேஸ்வரர் கோயில்	இரு கைகளில் இரு மோதகங்கள்
பவானி (திருநணா)	வீணை
ஸ்ரீசைலம் (திருப்பருப்பதம்)	குழல்
கும்பகோணம் நாகேசுவரர் கோயில்	உருத்திராட்ச மாலை

நீமறுபடியும் காண்டீபத்தைக் கையில் எடு. போர் செய்'' என்று கண்ணபெருமான் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிறார். அவருடைய அரிய அந்த உபதேசங்களை வில்லிபுத்தூராரின் திருவாக்கினாலும் நாம் காணலாம்.

''மாயையென்றொருத்தி தன்பால் மனமெனும் மைந்தன் தோன்றித்
தூய நல்லறிவன் தன்னைத் தோற்றமின்றாக்கிவைத்தான்
தாயோடு தந்தை மக்கள் தாரம் என்றிவர்பால் வைத்த
நேயமும் அவன்தனாலே நிகழ்ந்ததோர் நினைவு கண்டாய்''

- முதற்போர்ச் சருக்கம் 2

''அந்த நல்லறிவன் தன்னை யறிந்தவர் அறிஞராவார்
தந்தையால் வகுக்கப்பட்ட சராசரப் பொருள்கள் தோறும்
வந்த ஆன் தீம்பால் நெய் போல் உயிர்க்கு உயிராகி வாழும்
பந்தமதுணர்ந்து நேரே பார்க்குங்காற் பகை யார்? நண்பார்?''

- முதற்போர்ச் சருக்கம் 4

''உம்பருமுனிவர் தாமும் யாவரும் உணரா வொன்றை
இம்பரின்றுனக்கு நானே இசைவுறவு ணர்த்தாநின்றேன்
ஐம்பெரும் பூதத்தாலும் அமைந்தன உடலம்யார்க்கும்
நம்பன் ஒருவன் உள்ளே ஞானியாய் நடத்துகின்றான்''

-முதற்போர்ச் சருக்கம் 5

''என்னைநீபுகலக்கேண்மோ எங்குமாய் யாவுமாகி
மன்னியபொருளும் யானே மறைக்கெலாம் முடிவும்யானே
உன்னையான் பிறிவதில்லை ஒருமுறைபிறிந்து மேனாள்
நன்னிலா வெறிக்கும் பூணாய் நரனுநாராயணனு மானோம்''

- முதற்போர்ச் சருக்கம் 6

''பின்னொரு பிறப்பில்யாமே இராமலக்குமப் பேர்பெற்றோம்
இந்நெடும் பிறப்பில் நீயும்யானுமாய் ஈண்டு நின்றோம்
நின்னிடை மயக்குமிந்த நேயமும் ஒழிகவென்று
தன்னிலை யவற்குக் காட்டித்தத்துவம் தெளிவித்தானே''

- முதற்போர்ச் சருக்கம் 7

இவ்வாறு உபதேசித்துப் பரம் பொருளாம் தன்னுடைய உண்மை சொரூபத்தையும் அர்ச்சுனனுக்குக் காட்டுகின்றார் பார்த்தசாரதி. அச்சொரூபத்தை ஊனக் கண்ணால் காண்பது இயலாதாகையால், அர்ச்சுனனுக்கு ஞானக் கண்களையும் தந்து காண வைக்கிறார். பரம்பொருளின் உண்மை சொரூபத்தைப் பார்த்துத் தெளிவு கொள்ளும் பார்த்தன், நழுவவிட்ட தன் காண்டீபத்தை மீண்டும் கையில் எடுத்துக் கொண்டு போருக்கு ஆயத்தமாகிறான். அப்பொழுது அவனுடைய தேர்க்கொடியில் வந்து நின்று கூத்தாடுகின்றான் வீர அனுமன்.

(தொடரும்)



திருமந்திர உபதேசம்

"திருமந்திரச்செல்வர்" டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

திருமூலர் பெருமான் அருளிச்செய்துள்ள திருமந்திரமாகிய தமிழாகமத்தின் முதல் தந்திரத்தில் முதல் பகுதியாக வருவது **உபதேசம்** என்ற தலைப்புடையது. முப்பது மந்திரங்களைக் கொண்டது. அதிலே முதல் மந்திரம் **"விண்ணின்று இழிந்து"** என்ற சொற்றொடருடன் தொடங்குகிறது. இதற்கான விளக்கத்தைச் சென்ற இதழில் ஓரளவு கண்டு கொண்டோம்.

இறைவன், உயிர்களின் உய்திக்காக ஆற்றிவரும் அளவிடுவதற்கரிய செயல்களை அறிவினால் சிறிதளவு தான் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அதுவே, நம்மை மேலும் ஆழமாகச் சிந்தித்து, விளக்கம் பெற, மாபெரும் தூண்டுகோலாக அமைகிறது.

அடுத்து வரும் சொற்றொடர் **"வினைக்கீடாய் மெய் கொண்டு"** என்பதாகும்.

மெய் என்பது உடம்பும், கருவிகளுமாகும். வினைக்கேற்ப உடம்பை நாம் பெறுகிறோம் என்பது தான் உண்மை. எனது உடம்பு நான் செய்த வினைக்கேற்ப அமைந்து, வினைப்பயன்களை அனுபவித்து, முடிக்கும் வகையில் அமைகிறது.

உடலும், அதைச் சேர்ந்த கருவிகளும் ஜடப்பொருள்கள். அறிவில்லாத பொருள்கள். உயிர்தான் அறிவுடைய பொருள். அறிவோடு, இச்சை, ஆற்றல் போன்ற சத்திகளையும் பெற்றிருக்கின்றது. அறிவுடைய பொருள் ஒன்றால் தான் அனுபவிக்கவும் இயலும்.

உடலும், இந்திரியங்களும் உயிருக்கு கருவிகளாகப் பயன்படுகின்றன. அவ்வளவுதான். உயிருக்குள்ள ஒரு குறைபாடு, தான் சார்ந்த பொருளைத் தானேயாகக் கருதிக்கொள்வது. உண்மையில், உடல் வழியாகப் பெறும் அனுபவங்கள் உயிரையே அடைகின்றன. உயிரைப் பாதிக்கின்றன. உயிரினுடைய இச்சா சத்தி, கிரியா சத்தி போன்றவற்றை ஊக்கிவிட்டு, உயிரை மேலும் உடல் தொடர்புடைய அனுபவங்களில் ஈடுபடச் செய்கின்றன.

ஆகவே, செய்வான் என்பவன் ஒருவன் உண்டு. அது உடல் அல்ல. அது உயிர் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆணவத்தின் விளைவாக எழும் அறியாமையின் காரணமாக உடலுடன் சேர்ந்த உயிர் விபரீத ஞானத்தால் உந்தப்பட்டு தன் முனைப்போடு கூடிய செயல்பாட்டில் இயங்குகிறது.

வினை என்றால் செயல். ஒன்றை நாம் செய்ய விரும்பும்போது, அதைப் பற்றிய அறிவை முதலில் பெறுகிறோம். அந்த அறிவு, பொருள் மீது இச்சையைத் தூண்டிவிடுகிறது. நமக்கு இருக்கும் ஆற்றல்களை ஒன்று சேர்த்து, அந்தப் பொருளை பெறும் முயற்சியில் ஈடுபடுகிறோம். பெறுகிறோம். நாம் விரும்பிப் பெற்ற பொருளானதால் அதைத் துய்த்து இன்பம் பெறுகிறோம். பொருளை நாடி, அடைந்து இன்பம் பெறுவது என்பதே நமது குறிக்கோளாகிவிடுகிறது.

ஆனால் எல்லாப் பொருள்களும் இன்பத்தைத் தருவதில்லை. பார்க்கப் போனால், துன்ப அனுபவம் தான் வாழ்கையின் இயல்பு என்கிற நிலையைப் பார்க்கின்றோம். நமது இன்ப, துன்ப அனுபவங்கள் இப்பிறவியுடன் நின்று விடுவதில்லை. இப்பிறவியில் நாம் செய்யும் செயல்களின் பயன்களை அனுபவிக்கப் பல பிறவிகள் எடுக்க வேண்டியுள்ளது. அதேபோல், இப்பிறவியில், நாம் எதிர்ப்பார்க்காமலேயே பெறும் அனுபவங்களை, நான் முன்னம் பிறவிகளின் செய்த வினைகளின் பலாபலன்கள் என்று தெரிந்து கெள்ள வேண்டும்.

உயிரானது தனித்து நின்று, வினைப்

பயன்களை அனுபவிக்க முடியாது. அதற்கு உடலும் கருவிகளும், உலகமும், கல்வியும், கலையும் தேவைப்படுகின்றன. இவையெல்லாம் சேர்ந்து உயிரின் விருப்பத்திற்கேற்ப உருவம் பெறுகிறது. வினை இருக்குமேயானால், அதற்குப் பலன் இருக்க வேண்டும் என்பது தெளிவு.

ஆனால் வினையும், அதன் பலனும் சடப் பொருள்கள். அறிவற்றவை. தானாகப் போய் உயிரைச் சேராது.

உயிர்களுக்கோ, தாம் செய்த வினைகளின் பயன்களைத் தாமே எடுத்துக் கொள்ளும் அறிவோ, ஆற்றலோ கிடையாது. அப்படியிருந்தால், நற்பயன்களை மட்டும் எடுத்துக் கொள்ளும். உண்மையில் அப்படி நடப்பதில்லை. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன.

அதுமட்டுமின்றி, ஒரு வினையைச் செய்யாத நிலையில் அது, பிறரால் செய்யப்பட்டு அது வேறு ஒருவருக்குப் போய் சேருமானால் அங்கே ஒரு நியதியற்ற நிலை ஏற்பட்டுவிடும்.

ஆனால் உயிர் அனுபவங்களையெல்லாம் ஆழமாக நோக்கின் அருளாளர்கள் படைப்பிலே ஒரு நியதியைப் பார்க்கிறார்கள். நியதி உள்ளது என்றால் நியதிக்குத் தலைவன் ஒருவன் வேண்டும். அவர்களுடைய வினைக்கேற்ப, நன்மை, தீமைகளை, உயிருக்கு வருவிப்பது இறைவனே யாகும் என்று தெரிந்துகெள்ள வேண்டும்.

வேறு சில சமயங்கள், வினைக்கான பயன் தானே வந்து சேருமென்றும் அதற்காகச் சேர்ப்பான் ஒருவன் தேவையில்லை என்றும் கருதுகின்றது. மேற் கூறிய நிலையில் அந்த வாதம் ஏற்பதற்கில்லை என்பது நன்குபுலனாகிறது.

சைவசமயம் போற்றும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர் சாக்கிய நாயனார் என்பார். அவர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். பௌத்தத்தின் பகுதியாகிய சாக்கியநெறியில் நின்றாலும், முடிவான ஒன்றினைத் தெளிந்து, உணர்ந்து கொள்ள விரும்பினார். எந்த நிலையில் நின்றாலும், எந்த வடிவம் கொண்டாலும், சிவபெருமானுடைய திருவடியை மறவாமையே பொருள் என்று உணர்ந்து சிவபெருமானை, மிக்க அன்புடன் சிந்தித்துக் கொண்டிருந்தார். சிவலிங்கம் ஒன்றைக் கண்டமாத்திரத்தில் களிப்பின் மிகுதியால், என்ன செய்கிறோம் என்று அறியாதவராக ஒருகல்லை சிவலிங்கத்தின் மீது விட்டெறிந்தார். இறைவன் அதை ஏற்றுக் கொண்டான். அதுவே சாக்கிய நாயனாரின் வழிபாட்டு நெறியாயிற்று.

அவர் சைவத்தின் சிறப்பினைக் கண்டுகொண்டமுறை நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. வினைக் கொள்கையுடன் தொடர்பு உடையதுமாகும். வினையின் நால்வகைப் பொருள்கள் சைவத்திற்குத் தனித்தன்மை கொடுக்கின்றது என்று உணர்ந்து கொண்டவர் சாக்கிய நாயனார். சேக்கிழாரின் திருவாக்கு இதை சாக்கியநாயனாரின் வரலாற்றின் வழி தெளிவுபடுத்துகிறது.

''செய்வினையும், செய்வானும் அதன் பயனும்சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையாம் பொருள் சிவன் என்றருளாலே உணர்ந்தறிந்தார்''

''வினைக்கீடாய் மெய்கொண்டு'' என்கிறார் திருமூலர் பெருமான். மெய் என்ற சொல்லுக்கு உடல் என்பது பொருள். இது காறும் உடல் என்ற பொருளை முன்வைத்து சிலவிளக்கம் பெற்றோம். மெய் என்றால் உண்மை நிலை என்பதும் தெளிவு. இறைவனுடைய உண்மை நிலையைச் சொரூப நிலை அல்லது சிறப்பு நிலை என்பார்கள். உயிர்கள் தன்னை அடைய, இறைவன் தனது உண்மை நிலையை மாற்றிக் கொள்கிறான். அவனது சிறப்பு நிலை அறக்கருணை பாலிப்பதுமாகும். அவனது பொது நிலையில் அவன் தனது திரோதன சத்தி வழியாக மறக்கருணையை வெளிப்படுத்தி உயிர்கள் உடலைப் பெற்று இன்ப, துன்பங்களைத் துய்ப்பதன் வழி. பாசத்தைக் கழித்துக் கொள்ள வழிவகை செய்கிறான்.

இறைவன், வினைகளின் பயன்களை முறைப்படி உயிர்களுக்குச் சேர்க்கின்றான். அவற்றை அனுபவித்து மேல்நிலை அடைய தனது திரோதனசத்தியைப் பயன்படுத்திக் கொள்கிறான்.

'விண்ணின்றிழிந்து வினைக்கிடாய் மெய்கொண்டு'

(திருமந்திரம் உபதேசம் 113)

என்பதன் விளக்கம் இதுவேயாகும். (தொடரும்)

விநாயகி

இவர் விநாயகரின் சக்தி வடிவம்; பெண்மைக் கோலம். இவரைக் கணேசானி என்றும் கூறுவர். 1. சிதம்பரம் 2. திருச்செந்தூர் 3. திருக்குறுங்குடி 4. நாகர்கோயில் 5. திருநெல்வேலித்தேர் முதலிய இடங்களிலும் விநாயகியைத் தரிசிக்கலாம். யானைத் தலையும், பெண்ணின் உடம்பும், பெண் அல்லது புலியின் கால்களையும் கொண்டவர் விநாயகி.

“யார் பெறுவார் அச்சோவே”

டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

''திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்பது உலக நியதி. தித்திக்கும் தேன் சுவை கொண்ட திருவாசகத்தைப் படிக்கின்ற பொழுதெல்லாம் அன்பும் அருளும் ஆட்கொள்ளும்; தேனும் பாலும் படிப்பவர் நாவில் தித்திக்கும்; ஞானமும் கல்வி அறிவும் கிடைக்கும் என்பது சான்றோர் அறிந்த உண்மை. திருவாசகத்தைப் படித்தறிந்த வள்ளலார் பெருமான்,

''தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே''

என்று போற்றியுள்ளார் இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த ஜி.யூ.போப் அவர்கள் இந்திய நாட்டிலே கிறித்துவ மதத்தைப் பரப்ப வேண்டுமென்ற முழு நோக்கத்தோடு வந்தாலும், சொற்சுவையும் பொருட்சுவையுமிக்க திருவாசகமும், திருக்குறளும் அவரை ஆட்கொண்டன. ஆங்கில ஞானம் பெற்ற அந்த ஞானி, தமிழ் அரிச்சுவடி முதல் படித்து அதிலே புலமை பெற்று திருவாசகத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் சான்றாண்மை பெற்றுஅந்த இரண்டு நூல்களையும் உலகறியச் செய்த பெருமை பெற்றவராக விளங்கினார், திருவாசகத்தினுடைய அருமை, பெருமை, மாணிக்கவாசகர் பெருமான் ஆதி சிவன் மேல் கொண்ட அளவிடற்கரிய பற்று ஆகியன போப் அவர்களைஈர்த்தது.

அனுதினமும் மாணிக்க வாசகப் பெருமான் சிவ பெருமானைப் பாடுவது வழக்கம், தில்லையிலே சிவபொருமானை அப்படிப் பாடிக் கொண்டிருக்கின்றபொழுது தன்னைச் சிவம் ஆக்கி ஆட்கொண்ட அருள்திறத்தை வியந்து இத்தகைய பேற்றினைப் பெறவல்லார் வேறுயார் என்று வியப்புடனே பாடுவார் மாணிக்கவாசகர். ''அச்சோ'' என்பது வியப்பிடைச் சொல். குடநாட்டிலும், உதகை மருங்கிலும் இச்சொல் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றது.

பெரியாழ்வார் திரு மொழியில் இச் சொல்லானது ''குழந்தையை அணைத்துக்கொள்'' என்று பொருளாம். இறைவன் தனக்குச் செய்த பெருங்கருணையை வாய்விட்டுச் சொல்ல முடியாமல் அனுபவித்த அதிசயத்தால் கூறப்படுவது ''அச்சோ'' என்பதாகும். அதை மூலமாக வைத்து அச்சோப்பதிகம் என்று சொல்லக்கூடிய பதிகத்தில் உள்ள அனைத்துப் பாடல்களிலும் தன்னை விட அதிக பேறு பெற்றவர் இந்த மண்ணிலே யாரும் இல்லை என்று மாணிக்கவாசகர் வியப்படைவார்: பெருமை கொள்வார்; பேரானந்தக் கூத்தாடுவார். சிவபெருமான் மீது கொண்ட எல்லையற்ற பற்றின் காரணமாக மாணிக்க வாசகர் இறைவன் தனக்குப் பெரும் கருணை செய்த பேராசான் என்று சொல்லாமல் சொல்லி அதிசயிப்பார்.

முக்திக்கு உரிய வழிகளை அறியும் திருவருள்வாய்ப்பில்லாத மூர்க்கர்களோடு கூடி முயல்கின்ற வேளையில் அன்பு நெறி அறியச்செய்து பழைய வினைகள் அனைத்தும் சிதறிப்போகும் வண்ணம் ஆணவ மலத்தை நீக்கிச்சிவமாக்கி ஆட்கொண்ட தந்தை சிவபெருமான் அருளிய முறைமையானது வேறு யாருக்குக் கிடைக்கும்? வேறு யார் பெறுவார்கள்? அச்சோ என்று விளம்புவார். பேரின்பமாகிய முத்திக்கு உரிய நெறிகள் அரன்பால் அன்பை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுகின்ற அரன்பணியாகிய சரியை, கிரியை, யோக ஞானங்களாம். அவை தாழ்வு என்னும் தன்மையோடு சைவமாம் சமயம் சார்ந்து சைவ நூல்களைக் குரு வாயிலாகத் தெரிந்து தெளிந்தார்க்கே அறியப்படுமாம்.

இக்குணநலன்கள் இல்லாதோர் மூர்க்கராவர். அவர்களோடு கூடித்திரியாமல் இறைவன் திருவுளங்கொண்டு முத்தி நெறியாகிய பக்தி நெறியை அறிவித்தான் இறைவன் என்பார் மாணிக்கவாசகர்.

''முத்திநெறி யறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே''

வழியல்லாத வழியை வழியாக எண்ணி, அந்த வழியே செல்ல இருக்கின்ற தன்னை சிறுநெறிக்கண் சேராமல் இருக்கும் வண்ணம் கூத்த பெருமானின் திருஞான நடனத்தை அறியும் வண்ணம் எனக்கு அருளிய முறைமையை வேறு யார்பெறுவார்கள்? என்று பாடுகிறார்.

''நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத
கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே''

பிணக்கிற்கு இடம் கொடுத்து வாழ்க்கைக்கு நல்ல வழி சொல்லாமல் இருப்பது நெறியல்லா நெறியாகும். அவைகள் சிறு நெறிகள். திருவருள் நெறியே பெருநெறி. இந்நெறியின் முடிந்த பயன் ஞான நடனத்தையே நாடுதல். ஐந்தெழுத்து நடனமாகிய ஞான நடனத்தை நமக்கு அருளிச் செய்ததை வியக்கின்றார் மாணிக்க வாசகப் பெருமான்.

பொய் எல்லாம் மெய் என்று எண்ணி இருந்த என்னை மீட்டருளி மாதர் இன்பத்தில் மயங்கிக் கிடக்க இருந்த என்னைத் திருவடி இன்பத்தில் சேரும் வண்ணம் காட்டிய சிவபெருமானுடைய கருணையை வேறு யார் பெறக்கூடும்? என்று பாடுகின்றார்.

''பொய்யெல்லாம் மெய்யென்று
புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை
மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான்
தன் கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே''

உலக இன்பத்திலே சிக்கி இவ்வுலகத்தில் மீண்டும் பிறந்து இறக்க இருந்த என்னை மீட்டுத்தன் அன்பினை அருளிச் செய்து என்னை அழகுபடுத்திய பேற்றினை வேறு யார் பெறுவார்? என்கிறார்.

''செம்மைநலம் அறியாத
சிதடரோடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து
முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி
நாய்ச்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே''

வீட்டு இன்பத்தில் சிக்கி மாதர்களோடு கூடித் திரிந்து அதன் மூலம். வீணாக இருந்த என்னை செம்மையாக்கிச் சீர்படுத்தி மும்மலங்களையும் அறுத்து என்னை ஆட்கொண்டு குற்றம் போக்கி உலகத்திற்கு அறிமுகப்படுத்திய ஆதி சிவபெருமானை நான் எவ்வாறு போற்றுவேன்? நான் உண்மையிலேயே கொடுத்து வைத்தவன். சிவபெருமானின் ஞானத்தைப் பெறவும், அந்த ஞானத்தின் மூலம் உலகத்தை வலம் வரவும் மிகப் பெரிய பேறு பெற்றவன் என்று திருவாசகத்தின் மூலம் இறைவனை இறைஞ்சுவார்.

மாணிக்க வாசகர் தமது சீர் மிகுந்த பாடல் மூலம் மனித வாழ்கை நலம் பெற வேண்டுமானால் ஆணவம், கண்மம், மாயை மூன்றையும் விட்டு ஒழிக்க வேண்டும். இறைவன் மீது எல்லையற்ற பற்றுக் கொண்டிருக்க வேண்டும். இறைவன் மீது எல்லையில்லாத பற்று கொண்டிருக்கின்றபோது சிற்றின்பம் நீங்கிப் பேரின்பத்தை அடைய முடியும். பேரின்பத்தை அடைகின்றபோது மனிதனாகப் பிறந்ததன் அர்த்தம் விளங்கும் என்று அச்சோப்பதிகத்தின் மூலம் விளம்புவார்.

ஆலமர விநாயகர்

ஆலமர வேரில் விநாயகர் திருமேனி சுயம்புவாய் இருப்பதை சென்னை அரசினர் தோட்டத்தில் கண்டு வணங்கலாம்.

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை இடைக்காட்டுச் சித்தர்

முனைவர் இரா. செல்வக்கணபதி

யானை மேய்ப்பாரைப் பாகர் என்றும், ஆடு, மாடுகள் மேய்ப்பாரை இடையர் என்றும் கூறுதல் தமிழ்மரபு. இடையர்களைக் 'கோனார்' என்றல் கிராமவழக்கு. காட்டுப் பகுதிகளில் ஆடு, மாடுகளை மேய்க்கும் அன்னாரை முன்னிலைப் படுத்திக் 'கோனாரே' என்று விளித்துப் பாடும் பாடல்கள் பலவற்றைப் பாடியவர் இடைக்காட்டுச் சித்தர். காடன், மாடன் எனப் பெயர் வைத்தல் பண்டைய மரபு. இவரும் இடையர் மரபில் வந்தவராகலாம். அது பற்றி இவர் இடைக்காடர் என வழங்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. இடைச்சேரி இடையூர் என்பன போல இடைக்காடு என்னும் ஊரினராதல் பற்றியும் இப்பெயர் அமைந்திருத்தல் கூடும்.

இவர் கொங்கணச் சித்தரின் சீடர். கி.பி.15ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரின் வேறாகக் கடைச்சங்க காலத்தில் ஒரு இடைக்காடர் வாழ்ந்திருந்தார். திருவிளையாடல் புராணத்தில் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் என்ற ஒன்றும் வருகிறது. தொண்டை மண்டலச் சதகம் இவர் வரலாறு குறித்துச் சில செய்திகளைத் தருகின்றது. அந்நூல் இவர் கொற்றலை ஊரில் வாழ்ந்திருந்தவர் என்றும், சிவன் அருள் பெற்ற சித்தர் என்றும் குறித்துள்ளது.

அபிதான சிந்தாமணி இவர் வரலாறு குறித்த சில செய்திகளை வழங்குகின்றது. இவர் தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டிலிருந்த இடையர். பொதிகை மலைச் சாரலில் ஆடு மேய்த்திருக்கையில் நவ சித்தரில் ஒருவர் வந்து இவரிடம் பால் தருமாறு வேண்டினார். இவரும் ஆட்டுப்பால் வழங்கி உபசரிக்கச் சித்தர் இவருக்கு ஞானோபதேசம் செய்தார். அதனால் சித்தாடல் கைவரப் பெற்று இவர் இடைக்காட்டுச் சித்தராக உயர்ந்தார்.

அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் மழை இன்றி நாடு பஞ்சத்தில் துன்புறப் போவதை இடைக்காட்டுச் சித்தர் தம் தொலை நோக்கால் உணர்ந்தார். தம் ஆடுகளுக்குப் பஞ்சகாலத்திலும் தழைத்திருக்கும் எருக்கின் இலைகளை உண்ணப் பழக்கினார். காடுகளில் கிடைக்கும் பல ஆண்டுகள் கெடாத குருவிரகு என்னும் தானியத்தை மண்ணோடு கலந்து சேறாக்கிச் சுவர் வைத்துக் குடிசைஒன்றைச் சமைத்தார். பஞ்சகாலம் வந்தது. ஆடுகள் எருக்கிலை தின்பதால் ஏற்பட்ட ஊறலால் தம் உடம்பைக் குடிசையின் சுவரில் உராய்ந்தன. அப்போது மண்ணோடு கலந்திருந்த குருவரகு தானிய மணிகள் சில கீழே சிந்தின. அவற்றை மட்டும் உண்டு இவர் வாழ்ந்திருந்தார். இவரும் இவர் ஆடுகளும் 'பஞ்சகாலத்தில்' உயிர் வாழ்ந்திருப்பது அறிந்து வியந்த நவ கோள்களும் இவரைக் காண வந்தனர்.

இடைக்காட்டுச் சித்தர் அவர்களை அன்புடன் வரவேற்றார். குருவிரகைப் பாகம் செய்து ஆட்டுப் பாலுடன் கலந்து வழங்கி நவக்கிரக நாயகர்களை மகிழ்வித்தார். உண்ட மயக்கத்தில் அவர்கள் கண் மயங்கி உறங்கினர். அந்த நேரத்தைப் பயன்கொண்டு, ஒன்றுடன் ஒன்றுமாறு கொண்டு உலகத்தை வருத்திய நவ கிரகங்களை மழை பெய்வதற்கு ஏதுவாக இவர் இடமாற்றம் செய்தார். மழை பொழிந்து நாடு மகிழ்ந்தது.

இவர் 'சாரீரம்' என்னும் வைத்தியநூல் ஒன்றை இயற்றினார். இவரைப் போகர் மாணாக்கருள் ஒருவர் என்றும், மதுரைக்குக் கிழக்கேயுள்ள இடைக்காட்டினர் என்றும் விவேகசிந்தாமணி குறிப்புகள் வழங்குகின்றது.

கர்ண பரம்பரைச் செய்தி ஒன்று இவரை விஷ்ணு அம்சம் கொண்டவர் என்கிறது. ஒரு முறை இவரிடம் சித்தர் சிலர் வந்து விஷ்ணுவின் தசாவதாரத்தில் வணங்கத் தக்கவை எவை என வினவினார். இவர் நயமுற 'ஏழை, இடையன், இளிச்சவாயன்' எனக் கூறினார் என்பர்.

இடைக்காட்டுச் சித்தர் பாடியனவாகச் சித்தர் பாடல்கள் தொகுப்பில் இன்று 130 பாடல்களும் ஒரு காப்புச் செய்யுளும் காணப் படுகின்றன. வழக்குச் சொற்களும், வட்டாரச் சொற்களும் கலவாத நல்ல இலக்கிய நடையில் இவர் பாடல்கள் அமைந்துள்ளன. பதிப்பாசிரியர்கள் தங்களுக்குத்

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

ஒலிக்களஞ்சியம் வெளியீடு

வழங்குபவர்

செந்தமிழ்வாரிதி - பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பி.எச்.டி.,

1. ஒலிக்குறுந்தகடுகள் (Compact Disk) Audio CD
63 நாயன்மார் வரலாறுகளும், தலா 80 நிமிடம் ஒலிக்கும் 40 ஒலிக்குறுந்தகடுகளாக ஆங்கில வரலாற்றுச்சுருக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளன.
வெல்வெட் மரப்பேழையுடன். ரூ. 4,000/-
2. ஒலிப்பேழைகள் 'Audio Cassette'
63 நாயன்மார் வரலாறுகளும் தலா 65 நிமிடம் ஒலிக்கும் 40 ஒலிப்பேழைகளாக வெளியிடப்பட்டுள்ளன.
வெல்வெட் மரப்பேழையுடன் . ரூ. 2,000/-
3. MP3 CD தலா 13 மணி ஒலிக்கும் 4 MP3 CD -க்கள் வழி 63 நாயன்மார் வரலாறுகளும் ஆங்கில வரலாற்றுச் சுருக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளன.
கையடக்கப்பேழை (4 MP3 CD கொண்டது) ரூ. 2,000/-

தொடர்பு முகவரி

M/S. ARUN AUDIOS, CHENNAI - 90 என்ற தலைப்பில் காசோலை, வங்கிக் கேட்புக் காசோலை. பணவிடை அனுப்பிப் பெறலாம்.

முகவரி

அருண் ஆடியோஸ்
H 15/2, கரிகாலன் தெரு,
கலாசேத்திரா காலனி,
சென்னை - 600 090, இந்தியா

தொலைபேசி :
0091 - 044 - 2491 6888
Cell: 94440 21113
E-mail : nayanmar_63@yahoo.co.in

தோன்றியவாறு உள் தலைப்புக்களிட்டுப் பிரித்து இவர் பாடல்களைப் பதிப்பித்துள்ளனர். காப்புச் செய்யுள் பொதுப்பட இறைமைக் குணம் பேசி அமைந்துள்ளது.

> **''ஆதி அந்தம் இல்லாதவன் ஆதியை**
> **தீது கூறும் பவம் தீப்படு பஞ்சு போல்**
> **மோது றும்படி முப்பொறி ஒத்துறக்**
> **காதல் ஆகக் கருத்திற் கருதுவோம்''**

இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள் நன்கு ஆராயப்பட வேண்டிய நுட்பங்கள் கொண்டவை. சைவ-வைணவப் பனுவல்கள் ஆராயப்பட்ட அளவிற்குச் சித்தர் பாடல்கள் அறிஞர்களால் ஆராயப்படாமைக்கு உரிய காரணம் புலப்படவில்லை. ஏதேனும் ஒரு பின்புலம் இல்லை என்றால் சிலவகை இலக்கியங்களுக்கு வாழ்வு இல்லை என்றே தோன்றுகின்றது.

> **''தாம் திமிதிமி தந்தக் கோனாரே**
> **தீம் திமிதிமி திந்தக் கோனாரே**
> **ஆனந்தக் கோனாரே – அருள்**
> **ஆனந்தக் கோனாரே!''**

நின்று ஆனந்தக் கூத்தாடும் தந்தங்களை உடைய நர்த்தன விநாயகரை கோன்- தலைவனாகக் கண்டு, அவனிடம் நிறைந்திருக்கும் நிரந்தர மகிழ்ச்சியைத் தமக்கும் அருளுமாறு சித்தர் வேண்டித் தொடங்குவது புலனாகிறது. மகிழ்ச்சி தரும் தலைவன் என்ற பொருளில் 'ஆனந்தக் கோன்' என்ற தொடர் அமைகிறது. விளிக்கும் போது ஆனந்தக் கோனாரே என நீண்டுள்ளது.

சித்தம் போக்குச் சிவன் போக்கு என்பார்கள். பாடல்கள் பலவும் சிவனாரை முன்னிலைப் படுத்தியே அமைந்துள்ளன. தில்லையில் நடனமிடும் ஆனந்தக் கூத்தனை இவர் 'தாண்டவக்கோன்' எனக் குறிப்பிடுகிறார். வீடு பேற்றுக்குரிய எளிய வழிகளை இவர் பாடல்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. ஒன்றிரண்டைக் காணலாம்.

> **''மனம் என்னும் மாடு அடங்கில்**
> **தாண்டவக் கோனே! முத்தி**
> **வாய்த்தது என்று எண்ணேடா**
> **தாண்டவக் கோனே''**

மனத்தைப் பக்குவப்படுத்ததுவதே முத்திக்கு வாயில் என்கிறார் சித்தர். மனத்தை 'மாடு' என உருவகம் செய்த இடைக்காடர் 'சினத்தை'ப் பாம்பு என்று நாட்டுகிறார்.

> **''சினம் என்னும் பாம்பு இறந்தால்**
> **தாண்டவக்கோனே- யாவும்**
> **சித்தி என்றே நினையோடா தாண்டவக்**
> **கோனே''**

இவை போல் 'ஆசை'யை இவர் பசு என்கிறார்.

திருமூலர் அடங்காத புலன்களை மேய்ப்பாரை இன்றி வெறித்துத் திரியும் பசுக்களாகக் குறிப்பார்.

''ஆசைஎன்னும் பசுமாளின் தாண்டவக்
கோனே - இந்த
அண்டம் எல்லாம் கண்டறிவாய்
தாண்டவக்கோனே''

கட்டுக்கு அடங்காத ஐம்பொறிகளை இவர் ஐந்து ஆடுகள் என்றும், ஐம்புலன்களை இருள் சூழ்ந்த காடு என்றும் குறிக்கிறார். பொறியாம் ஆடுகளைப் புலன்களாம் காட்டுள் நுழையவிடாது அவற்றை நான் 'ஓட்டினேன் ஃ வாட்டினேன் ஃ ஆட்டினேன்' என்கிறார். ஆசைப் பசுவை முன்னிறுத்தி, நம் சிவன் தாயினும் சாலப் பரிவுடையவன். அது அவன் சிவசக்தியோடு கூடி யிருத்தலால் அறிவாய்ஃ அன்பு உடையவரை அவன் என்றும் விட்டு நீங்க மாட்டான் என அறிவு கொளுத்துகிறார்.

''தாயினும் அன்பன் அன்றோ- பசுவே
சக்திக்குள் ஆனவன்தான்
நேயம் உடையவர் பால் - பசுவே
நீங்காதிருப்பானே''

அறிவோடும், நெஞ்சோடும், பலரோடும் இவர் பேசுமாறு அமைந்த குறள் வெண் செந்துறைக் கண்ணிகள் அற்புதச் சிறப்பில் ஒளிர்வன. இறைவன் உண்மை உணர்ந்து

''பாலில் சுவை போலும் பழத்தில் மதுப்போலும்
நூலில் பொருள் போலும் நுண்பொருளைப் போற்றீரோ?''

என வினவுகிறார். தன் நெஞ்சைமுன்னிலைப் படுத்தி

''பேய், குரங்கு போலப் பேருலகில் இச்சைவைத்து
நாய் நரிகள் போல் அலைந்தால் நன்மை உண்டோகல்மனமே?''

என வினாத் தொடுத்து ஆசைஅறுக்க வழி காட்டுகிறார். அறிவுக்கு அறிவு சொல்வாராய்

''இருட்டறையில் நல்விளக்காய் இருக்கும் உன்றன் வல்லமையை
அருள் துறையில் நிறுத்தி விளக்காகு நீ புல்லறிவே!''

என ஊட்டமுறப் பேசுகிறார். இவ்வாறே இடைக்காட்டுச் சித்தர், தம் அகக்கருவியாகிய சித்தத்தோடும், குயிலோடும், மயிலோடும் அன்னத்தோடும் பேசுவன பரவசப்படுத்தும் உண்மைகளாக ஒளிவீசுகின்றன.

ஆயர்குல வழக்கங்களை நயம்பட இணைத்து, புல்லாங்குழல் ஊதுதல், பால் கறத்தல், கிடை கட்டுதல் (கோடையில் மாடுகளை வயலில் தங்க வைத்தல்) எனப் பலபடக் கவி பாடுகிறார் சித்தர். உயிர்கள் ஆட்டு மந்தைகள்; உலகப் பற்றுக்கள் அவற்றை அடித்து உண்ணவரும் புலிகள் என்று உருவகித்து,

''ஆட்டுக் கூட்டங்களை அண்டும் புலிகளை
ஓட்டியே ஊதுகுழல் - கோனே
ஓட்டியே ஊதுகுழல் கோனே!''

உலகியலைக் கடந்த ஞான நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும் இடைக்காடர், உட்பொருள் எளிதில் புலப்படாத சங்கேத நடையில்

''சாவாது இருந்திடப் பால்கற - சிரம்
தன்னில் இருந்திடும் பால் கற!
வேவாது இருந்திட பால்கற - வெறு
வெட்ட வெளிக்குள்ளே பால்கற!''

எனப் பேசுகிறார். நிறைவாகக் கிடை கட்ட அறிவுறுத்தும் இடைக்காட்டுச் சித்தர், கிடை மாடுகளில் சிலவற்றை ஒதுக்கி வைக்க வேண்டுவார்போல,

''அகங்கார மாடுகள் மூன்று அகற்றிவிடு கோனே - நாளும்
அகந்தை எனும் மாடரைநீஅடக்கிவிடு கோனே''

என்றும், சில மாடுகளைக் கால்கட்டுப் போடுவாய் என்பார்.

''காரணக்கோ மூன்றனையும் கால் பிணிப்பாய் கோனே - நல்ல
கைவசமாய் சாதனங்கள் கடைப் பிடிப்பாய் கோனே''

என்று அறிவுறுத்துகின்றார்.

இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடும் தமிழர்கள், தங்களிடம் ஞானமயமான ஒரு சித்தர் கருவூலம் இருப்பதை உணர்ந்து பெருமை கொள்வார்கள் ஆக!

வரதட்சணைக்கு எதிராகக் கல்வெட்டுகள்

கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் பெண்களை மணக்க வரதட்சணை வாங்கும் கொடிய பழக்கம் பரவ ஆரம்பித்ததைக் கண்டிக்கும் வகையில் கல்வெட்டுக்கள் பல கோயில்களில் இடம் பெறலாயின.

விரிஞ்சிபுரம் கோபிநாதர் ஆலயத்தில் உள்ள கல்வெட்டில் ''வரதட்சணை கொடுப்பவர் ஆயினும் வாங்குபவராயினும் சாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டு ஒதுக்கப்படுவார்கள்'' என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.



வேலூர் சேண்பாக்கம் விநாயகர்

வேலூரில் இருந்து வேலூருக்கு வடமேற்கே வேலூர் - பெங்களூர் சாலையில் 3 கி.மீட்டர் தொலைவில் $1\frac{1}{2}$ கி.மீ. உள்வாங்கி அமைந்துள்ள கிராமம் சேண்பாக்கம் என்னும் கிராமம்.

'செண்பக வன'மாக இருந்தது சேண் பாக்கமாக மாறியது என்று சொல்லுபவர்களும்,

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 15.8.05 அன்று பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாடு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திருமிகு பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

சுயம்புவான விநாயகர்கள் அமைந்த பகுதி ஸ்வயம்பாக்கம் என்பது மருவி 'சேண்பாக்கம்' என்றாயிற்று என்று சொல்லுவோரும் உண்டு.

பலயுகங்களுக்கு முன்னால் இங்கு இருக்கும் பதினோரு விநாயகர்களும் பாலாற்றின் கரையில் சுயம்புவாகக் குடிகொண்டனர். ஆதிசங்கரர் இத்திருக்கோயிலின் சுயம்பு விநாயக மூர்த்தங்களை வணங்கி ஈசான்ய பாகத்தில் சக்கர ஸ்தாபனம் செய்ததாக வரலாறு உண்டு. துக்கோஜி என்னும் மராட்டிய மன்னன் (கி.பி.1677), இரவு வேளையில் சாரட்டில் போய், சேண்பாக்கத்தில் கோயில் இருக்குமிடத்தில் அச்சுமுறிந்து, வண்டிச் சக்கரத்தில் ரத்தத்தை கண்டு தடைநீக்கும் விநாயகரையும் வேண்ட, அவர் காலையில் தன்னை வந்து தரிசிக்கும்படி உத்தரவிட்டதாகவும், அதன்படி வந்து விநாயகரைக் கண்டு தரிசனம் செய்ததாகவும் தற்போது இருக்கும் கட்டிடப் பகுதி அவராலேயே கட்டப்பட்டதாகவும் வரலாறு உண்டு.

இவ்வளவு தூரம் வந்த பிறகு

ப. ராஜா, பி.எஸ்.ஸி., பி.எல்.
இணை ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

இந்தப் பதினோரு விநாயகர்களும் ''ஓம்'' என்ற எழுத்து போல் அமைந்துள்ளனர். நடுநாயகமாக வீற்றிருக்கும் செல்வ விநாயகர் முதுகில் சாரட் வண்டி நின்ற இடத்தில் காணப்படும் வடு இருப்பதும், மேற் கூரையின்றி இருப்பதும் இதனை அதிசயித்து வணங்கத்தக்க வகையில் உள்ளன.

இங்கு மூலவர் சன்னதியிலேயே கொடி மரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நவக்கிரக சனி மூலவரை பார்த்தபடி இருப்பதால் ஏழரைச்சனி உபாதை உள்ளவர்கள் இங்கு வந்து வணங்குவது வழக்கம். சங்கடஹர சதுர்த்தி தரிசனமும், பாலவிநாயகர் பாலாபிஷேகமும் சிறப்பு வாய்ந்த பிரார்த்தனைகளாக உள்ளன.

விநாயக சதுர்த்தியின்போது ஓங்கார வடிவில் அமைந்துள்ள ஏகாதசசுயம்பு விநாயகர்களை வழிபட்டுச் சகல செல்வங்களும் பெறலாம். இவ்வளவு தூரம் வந்து விநாயகரை வழிபட்ட நாம், இத்திருத்தலத்திற்கு அருகிலுள்ள பிற சிறப்புமிக்க தலங்களையும் வழிபட்டுப் பயன்பெறலாமே.

முடிசாய்த்த அண்ணல்

திருவாரூர் தேர் அழகு, திரு விரிஞ்சைமதிலழகு என்னும் சிறப்பை உடைய

பெரிய புராணத் தொடர்ச் சொற்பொழிவு தொடக்கவிழா

சைதை அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயிலில் பெரியபுராணத் தொடர்ச்சொற்பொழிவு நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப.** அவர்கள் தொடங்கி வைத்தார்கள். சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப.ராஜா பிஎஸ்.சி.பிஎல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். ''செந்தமிழரசு'' திருமிகு கி.சிவகுமார் எம்.இ.அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை மாலையும் பெரிய புராண விரிவுரை நிகழ்த்துகின்றார்கள்.

விரிஞ்சிபுரம் சென்னை- பெங்களூர் நெடுஞ்சாலையில் வேலூரிலிருந்து 12கி.மீ. தொலைவில் உள்ள செதுவாலை என்ற கிராமத்திற்குச் சென்று அங்கிருந்து 1 கி.மீ. தூரத்தில் விரிஞ்சிபுரம் அடையலாம்.

ஏழு நிலை இராஜகோபுரத்துடன் நம்மை அழைக்கும் அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் என்னும் வழித்துணைநாதர் திருக்கோயிலைக் காணலாம். விரிஞ்சன் என்றால் பிரம்மா என்று பொருள். விரிஞ்சன் வேண்டியதற்கு ஏற்ப திருவிரிஞ்சி புரத்தில் பனைமரத்தைத் தல விருட்சமாக கொண்ட இத்திருத்தலத்தில் சிவபெருமான் லிங்கவடிவில் காட்சி தருகிறார்.



சிம்மக்குளம்

சிவசர்மன் என்னும் சிறுவனுக்கு இளம் வயதிலேயே தந்தை காலமாகிவிட, பூஜை செய்யும் பொறுப்பு வந்தது. தன் மகன் பூஜை செய்ய உதவும்படி தாய் இறைவனை வேண்ட இச்சிறுவன் இறைவனுக்கு எவ்வாறு அபிஷேகம் செய்ய முடியும் என ஐயுற்றனர் பலர். சிவசர்மன் ''எந்தையே எமக்கு எட்டவில்லையே நும்முடி'' என வேண்ட, சிவன் பக்தனுக்கு இறங்கி திருமுடியை வளைத்து அபிஷேகம் ஏற்றுக் கொண்டார். அதே கோலத்தில் முடி வளைத்துக் காட்சி தருகிறார். அந்த முடி வளைத்து அபிஷேகம் ஏற்றுக் கொண்ட நாள் கார்த்திகைக் கடை ஞாயிறு ஆகும். அன்று அனைத்துத் தேவர்களும் இத்தலத்துக்கு எழுந்தருளி இக்கோனேசுவரை வணங்குவதாக ஐதீகம்.

எவர் ஒருவர் அந்நாளில் கோனேசரை வணங்குகிறாரோ, அவர்களுக்கு வாழ்க்கைத் துணையாக இருந்து பலவித இன்னல்களை நீக்கி நன்மை செய்கிறார் என்பது கண்கண்ட வரலாறாக உள்ளது. இந்தக் கடை ஞாயிறு ஐதீக விளக்கச் சிற்பங்கள் தென்மேற்கு கல்யாண மண்டப அடித்தளத்தில் உள்ளன.

ஸ்ரீ கௌரி தேவியால் உண்டாக்கப்பட்டதும் ஆதிசங்கரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான சிம்மக்குளம் இத்தலத்தின் விசேட தீர்த்தமாகும்.

கார்த்திகைக் கடை ஞாயிறு இக்குளத்தில் மூழ்கி இரவிலே கோயிலில் நித்திரை செய்யும் போது அவர்களின் பூர்வ பாவங்கள் நீங்கி, குழந்தைகள் இல்லாதவர்கள் கருத்தரிப்பதும், பிசாசு, முனி மோகினி, பில்லி, சூன்யம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் அவை நீங்குவதும் இத்தல மகிமையாகும்.

தனபாலன் என்ற வணிகனுக்கு வழித் துணையாக வந்த இறைவன் என்பதனால் வழித் துணைநாதர் எனவும் இறைவன் அழைக்கப் படுகிறார்.

இத்திருத்தலத்தில சகஸ்ரலிங்கம், அஷ்டோத்திரலிங்கம், காலம் காட்டும் கல், பல்லவ, சோழ, விஜயநகர மன்னர்கள் காலத்தில் வடிக்கப்பெற்ற கற்சிற்பங்கள் ஆகியவற்றைக் கண்டு மகிழலாம்.

அம்பாள் மரகதாம்பிகை எனவும் அழைக்கப்படுகிறாள்.

காலம் காட்டும் கல்

திருவேற்காடு திருக்கோயிலில்

பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாடு விழா

திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயிலில் 15.8.05 அன்று பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாடு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திருமிகு பொன்னையன் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறைஅமைச்சர் திருமிகு ஓ. பன்னீர்செல்லவம் அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச்சிறப்பித்தார்கள்.

பிரதோஷம், சங்கடஹர சதுர்த்தி, சஷ்டி, அமாவாசைஆகிய நாட்களும் ஆடிமாதம் ஆடிப்பூரமும், கார்த்திகை கடைஞாயிறும் பங்குனி பிரம்ம உற்சவமும சிறப்பான நாட்களாகும்.

திருதியை திரியோதசி ஆகிய நாட்களில் திரிசதி அர்ச்சனை செய்வது இத்தலத்தில் விசேஷ பிரார்த்தனை ஆகும்.



திருவலம் நந்தி

வளர்நகர்த் திருவலம்

திருவலம் என்னும் ஊர், காட்பாடி ரயில்வே நிலையத்திலிருந்து கிழக்கே 12 கி.மீட்டர் தொலைவிலும், சென்னை - மும்பை தேசிய நெடுஞ்சாலையில் இராணிப் பேட்டைக்கு மேற்கே 10 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூரில் தொண்டை நாட்டு பாடல் பெற்ற 32 தலங்களுள் ஒன்றான அருள்மிகு வில்வநாதீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவன் வில்வநாதர், திருவல்லமுடையார், தீக்காளிப் பெருமான் என அழைக்கப்படுகிறார்.

இறைவியின் திருநாமம் வல்லாம்பிகை, தனுமத்தியாம்பாள் என அழைக்கப்படும் ஒரு பாக முடையாள் என்பது ஆகும். காசியில் கங்கை நதியில் கரைப்பதற்காக எடுத்துச் சென்ற அஸ்தி இத்திருத்தலத்தின் தீர்த்தக் கரையில் வைத்திருந்தபோது சுகந்த மலர்களாக மாறி மணம் வீசின என்று வரலாறு இத்திருத்தலத்தின் தீர்த்த மகிமை கூறுகின்றது. அதனால் பிதுர்க்கடன் செய்வோர் இங்கு செய்கின்றனர்.

இத்தலத்தின் நடராஜர் சன்னதியின் விமானத்தில் 27 நட்சத்திரங்களும், வரிசையாக திருவல்ல நாதரை வணங்கும் வகையில் அமைந்து உள்ளன. மற்ற திருக்கோயில்களைப் போல் இல்லாமல் இத்திருக்கோயிலில் நந்தி, தஞ்சன் - என்ற அரக்கருடன் போரிட இறைவனிடம் சென்றதால் கிழக்கு நோக்கி இறைவனுக்கு முதுகிட்டு பிரம்மாண்ட உருவில் காட்சி தருகிறது. இத்திருக்கோயிலில் தரிசனம் செய்வதால் நவகோள்களால் உண்டாகும் பாதிப்பு நீங்கும். கோள் நிலை பாதிப்பில் விடுபட திருவல்லநாதரை வணங்கிப் பலம் பெறுவோம்.

குறத்தி மகள் வள்ளியின் மலை

வேலூரிலிருந்து சோளிங்கர் - திருத்தணி செல்லும் வழியில் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. மலைக்கோயில் ''கீழ்க்கோயில் என இரண்டு கோயில்கள் உள்ளன. மலைக்கோயில் $7^1/_2$ மணி முதல் $12^1/_2$ மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும்'' கீழ்க்கோயில் இரவு $7^1/_2$ மணி வரையிலும் தரிசனத்திற்காக திறந்திருக்கிறது.

குறத்தி மகள் வள்ளியுடன் முருகன் திருவிளையாடல் புரிந்ததால் வள்ளிமலை எனப்படுகிறது. 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரால் 11 பாடல்கள் பாடப் பெற்றத் தலமாகும்.

சித்தர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டு

வள்ளி மலை

உலக குரு கிருஷ்ணன்

நலம் தரும் சொல் நாராயணன் எனும் சொல் என்பார்கள். அந்த நாராயணன் கண்ணனாக அவதரித்த திருநாள் கிருஷ்ணன் ஜெயந்தி.

கிருஷ்ணன் என்றதும் நினைவுக்கு வருவது கீதை. உலகம் யாவையும் காத்து வரும் உலக முதல்வனாகிய கிருஷ்ணன் உலக குருவாய் வந்து உபதேசித்தான். அந்த உபதேசக் கவிதைகளின் உன்னதத் தொகுப்பே பகவத் கீதை.

பகவத் கீதை தெய்வீகத்துக்கு மட்டும் வழிகாட்டவில்லை. உலகியலுக்கும் வழிகாட்டுகிறது. வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் வாகை சூட வழியைச் சொல்லித் தருகிறது.

மனிதனை நிறைமனிதன் ஆக்கும் மகத்தான கீதையைத் தந்த பகவான் கிருஷ்ணன் பிறந்த நாளாகிய இன்று மானிடம் மேனிலையை அடையப் பிரார்த்திப்போம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் திருவருளால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காத செல்வம் தமிழர் வாழ்வில் நிறையட்டும் என்று வாழ்த்துகிறேன். - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய ''கிருஷ்ணஜெயந்தி'' வாழ்த்துச் செய்தியிலிருந்து.

இருப்பதாக கூறப்படும் இம்மலையின் குடைவரைக் கோயில் ஒரு பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. 8ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்கோயில் அமைந்திருக்கலாம் என்பது ஆராய்ச்சி யாளர்கள் கருத்து.

குடைவரைக் கோயிலில் வள்ளி தெய்வானை உடனாக மயூரநாதன் காட்சி தருகிறார்.

வள்ளி ஆயலோட்டிய இடங்கள், மலை மேல் திருக்கோயிலுக்கு மேற்கிலும், பள்ளத் தாக்கிலும் அமைந்துள்ள ஓடை, மற்றும் அருகில் அமைந்துள்ள சமணர் குகை ஆகியவை கண்டு ரசிக்கத் தக்கனவாகும்.

வள்ளி, முருகனுக்குத் தேனும் தினை மாவும் கொடுத்ததாகப் புராணம் கூறுகிறது. அந்தத் தேன் எடுத்த இடம் ''தேன் கூட்டுப்பாறை'' என வழங்கப்படுகிறது.

மலையடிவாரத்தில் அமைந்துள்ள சரவணப் பொய்கை, அழகாகவும் சுத்தமாகவும் அமையப் பெற்றுள்ளது.



சரவணப் பொய்கை

வேலூர் செல்வோர் வேலனை தரிசிக்காமல் திரும்புவது வீண் என்பது இத்திருக்கோயிலைப் பார்த்த பிறகு தெரிய வருகிறது.

வண்ண வண்ண விநாயகர்

கேரளாபுரம் - குமரி தக்கலை யருகில்- நிறம் மாறு விநாயகர் - இவர் ஆவணி முதல் ஆறு மாதம் வெள்ளை நிறத்துடனும், மாசி முதல் ஆறு மாதம் கருப்பு நிறத்துடனும் காட்சி தருவது மிக வியப்புக் குரியது. நிறம் மாறும் இத்திருமேனி சந்திர காந்தக் கல்லால் அமைந்தது என்பர்.

திருவலஞ்சுழி - சுவேத (வெள்ளை) விநாயகர். கடல் நுரையால் செய்யப்பட்டவர். ஒன்பது அங்குல உயரமுடைய மிகச்சிறிய மூர்த்தி.

திருவண்ணாமலை - செங்காவி விநாயகர்

சின்னம்பேடு (சிறுவாபுரி) - மரகதப்பச்சைவிநாயகர்.

மஞ்சாடி கிராமம் - நாகப்பட்டினம் திருவாரூர் சாலையில் - மஞ்சள் விநாயகர்.

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில்
திருவலிதாயம் (குருஸ்தலம்)

பாடி,சென்னை - 600 050.

குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா
18.9.05 (ஞாயிறு) 19.9.05 (திங்கள்)

குருபெயர்ச்சிக்குத் திருவலிதாயம் வருக! குருவருள் பெற்று வளமுடன் வாழ்க !

பேரன்புடையீர்!

தொண்டை நாட்டு பாடல் பெற்ற 32 சிவாலயங்களில் ஒன்றானதும், வியாழ குரு வழிபட்டு பாப நிவர்த்தி பெற்றதன் காரணமாக குருஸ்தலம் எனப் பெயர் பெற்றதும், தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் மற்றும் அருணகிரிநாதர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் உள்ளிட்ட அருளாளர்களால் பாடப் பெற்றதும் திருச்செந்தூர், ஆலங்குடி, தென்குடிதிட்டை போன்ற முக்கிய குரு ஸ்தலங்களில் ஒன்றானதும், சூரியன் - சந்திரன் - இந்திரன்- இமயன்- ஸ்ரீமகாவிஷ்ணு - ஸ்ரீராமர் - ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீபரத்துவாஜமாமுனிவர் ஆகியோரால் பூஜிக்கப்பட்டதுமான ''திருவலிதாயம்'' (குருஸ்தலம்). இத்திருக்கோயிலில், நிகழும் பார்த்திப வருஷம் புரட்டாசி மாதம்3-ஆம்நாள் அருள்மிகு குருபகவான் கன்னி ராசியிலிருந்து துலா ராசிக்கு 19.9.2005 திங்கட்கிழமை காலை 8,58 மணிக்கு குரு பெயர்ச்சியாவதை முன்னிட்டு அருள்மிகு தட்சிணாமூர்த்தி - குருபகவானுக்கு, குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா 2 நாட்கள் 18-09-2005 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 19-09-2005 திங்கட்கிழமை காலை 7-30 மணி முதல் இரவு 9-00 மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது,

குருபரிகார சாந்தி செய்து கொள்ள வேண்டிய ராசிக்காரர்கள் :
ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம், மீனம்
இலட்சார்ச்சனை கட்டணம் ரூ, 100/- மட்டும்.

பி.எஸ். சண்முகசுந்தரம், **வெ.சாரங்கபாணி,** M.A., B.L.,

பரம்பரை நிர்வாக தர்ம கர்த்தா நிர்வாக அதிகாரி

குறிப்பு :

1. **இலட்சார்ச்சனை கட்டணம் ரூ, 100 (பெயர், இராசி, கோத்ரம், நட்சத்திரம் ஆகிய விவரத்துடன்) மணியார்டர் / வங்கி டிராப்ட் மூலம்** அனுப்பி வைத்தால் சங்கல்பம் செய்யப்பட்டு 18.9.2005 ஞாயிறு/ 19.9.2005 திங்கள் ஆகிய ஏதேனும் ஒரு தேதியில் இலட்சார்ச்சனை செய்யப்பட்டு, பூஜையில் வைக்கப்பட்ட குருபகவான் வெள்ளி டாலர் (2 கிராம்), விபூதி பிரசாதத்துடன் தபாலில் **25.9.2005** தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும். **நேரில் கலந்து கொள்பவர்கள் திருக்கோயிலில் கட்டணச்சீட்டு பெற்று 18.9.2005 தேதிக்குள் முன்பதிவு செய்ய கொள்ள வேண்டும்.**
2. ஐ.சி.ஐ.சி.ஐ. திருக்கோயில் வங்கி கணக்கு எண். 602701217206 வழியாகவும் ரூ.100/- செலுத்தித் தபாலில் இதர விபரங்களை அனுப்பி இலட்சார்ச்சனைக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம்.
3. சென்னை மாநகர பேருந்து நிற்கும் இடம் :- பாடி, சென்னை - Lucas & TVS, அருள்மிகு படவட்டம்மன் கோயில்
   வரும் பேருந்து எண்கள் : 7B, A20, 27A, 47G, A70, 71, 71A, 71E, PP70, 41D, 47D, 120, 121, 248 (Mufussil 72, 72A, 97C)
4. வழித்தடம் : அம்பத்தூர் - ஆவடி - திருவள்ளூர் மார்க்கம்
5. அருகாமை ரயில்வே ஸ்டேசன் : பாடி, கொரட்டூர். வில்லிவாக்கம்.
6. அருகாமை பஸ் நிலையம் : 1. அண்ணாநகர் மேற்கு (1கி.மீ.) 2. அம்பத்தூர் எஸ்டேட் (2 கி.மீ.)
7. இணைய தளத்தில் இத்திருக்கோயில் வரலாறு, குரு பெயர்ச்சி விழா பற்றிய விவரங்களையும் பார்த்துக் கொள்ளவும்

E-Mail : thiruvalitayam@vsnl.net போன் : 044- 2654 0706 Website: www.thiruvalitayam.com

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05

அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி - 620 002.

திருச்சிராப்பள்ளி மாநகரின் மத்தியில், அழகிய மலைக்குன்றின் மேல், காவிரி நதிக்கரையில் மலைக்கோட்டைக் கோவிலாக இத்திருக்கோயில் அமையப் பெற்றுள்ளது. சிவபெருமான் எழுந்தருளியுள்ள 274-திருத்தலங்களில் அப்பராலும், சம்பந்தராலும் பாடப்பெற்ற முக்கியமான சிவாலயமாகும். இத்திருத்தல மூலவர் தமிழகத்தில் உள்ள சிவலிங்கங்களுள் நான்காவது பெரிய லிங்கம் ஆகும். இது சுகப்பிரசவத்திற்கான பிரார்த்தனை ஸ்தலமாகும்.

தென்கயிலாயம் என்று போற்றப்படும் இம்மலைக் குன்று 3,500 - பில்லியன் ஆண்டுகள் பழமையானது. மலையின் அடிவாரத்தில் அருள்மிகு மாணிக்கவிநாயகரும், மத்தியில் அருள்மிகு தாயுமானசுவாமி மட்டுவார் குழலம்மையும், உச்சியில் உச்சிவிநாயகர் சன்னதியும் அமைந்துள்ளது. விநாயகர் சதுர்த்திவிழா இத்திருக்கோயிலில் 07-09-2005 முதல் 20-09-2005 வரை திருவிழாவாகச் சிறப்பு அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. விநாயகர் சதுர்த்தி நாளன்று 18-படி அரிசியாலான பெரிய கொழுக்கட்டை உச்சிவிநாயகர், மாணிக்க விநாயர் அருள்மிகு சன்னதிகளில் நைவேத்தியம் செய்யப்படும். கொழுக்கட்டை நைவேத்தியத்திற்கு சேவார்த்திகள் விரும்பும் தொகையை அனுப்பலாம்.

வ.எண்	கட்டண விபரங்கள்	கட்டணம் ரூ.	நிரந்தர முதலீடு
1.	அர்ச்சனை செய்து தபாலில் பிரசாதம் அனுப்புவதற்கு (விநாயகர் சதுர்த்தி நாள் உள்பட)	25/-	2.500/- மாதந்தோறும் அனுப்ப
2.	வாழைப்பழத்தார் கட்ட (சுகப்பிரசவப் பிரார்த்தனை)	150/-	--
3.	மாணிக்கவிநாயகர் அபிஷேகக் கட்டளை	250/-	5,000/-
4.	உச்சிவிநாயகர் அபிஷேகக் கட்டளை	250/-	5,000/-
5.	மாணிக்க விநாயகர் சந்தனக்காப்பு	600/-	12,000/-
6.	உச்சி விநாயகர் சந்தனக்காப்பு	600/-	12,000/-
7.	விநாயகர் சதுர்த்தி விழா 07-09-2005 முதல் 20-09-05வரை (அபிஷேகம் மற்றும் சுவாமி புறப்பாடு) மேற்படி விழா நாட்களில் உபயதாரர் விரும்பும் ஒரு நாளுக்கு மட்டும்	நாள் 1-க்கு ரூ. 2,000/-	நிரந்தர முதலீடு ரூ. 50,000/- (ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தி விழா உபயத்திற்கு)

தொகை அனுப்ப வேண்டிய முகவரி :

''உதவி ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சி - 2.
தொலைபேசி எண் : 0431 - 2704621
இணைய தளம் : www.tiruchyrockfort.org
மின்அஞ்சல் முகவரி : trichyrockforttemple@sancharnet.in

திரு. எஸ். ரமேஷ்பாபு, பி.இ.,
அறங்காவலர் குழுத்தலைவர்

திருமதி சி. கல்யாணி, எம்.எல்.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

அறங்காவலர்கள்:

திரு. சி. கார்த்திகேயன், பி.இ.,
திருமதி எஸ். வளர்மதி, எம்.ஏ.பிஎல்.,
திரு.டி.சிங்காரம்
திரு. கே. எஸ். பாஸ்கரன், பி.ஏ.பி.எல்.,